
Annual Subscription Rs.100/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்


மலர் - 28 இதழ் - 7 ஜூலை 2015

தனிப்பிரதி
ரூ.10/-



காட்டுப்புஷ்பங்கள் எப்படி வளருகிறதென்று
கவனித்துப் பாருங்கள்
(மத்தேயு 6 : 28)

# புதிய வெளியீடு





**மிக நேர்த்தியாக அச்சிடப்பட்டு தேர்ந்த முறையில் பைண்டிங் செய்யப்பட்ட பாட்டுப் புத்தகம் வேண்டுவோர் எங்களை தொடர்பு கொள்ளவும்.**

**550 தமிழ்ப் பாடல்கள்**
**50 ஆங்கிலப் பாடல்கள்**
**40 தமிழ், ஆங்கில குறும்பாடல்கள்**


## ஆசானின் அறிவுரையிலே ...


| | |
|---|---|
| 1. ஆசிரியர் உரை | 3 |
| 2. ஏன் கிறிஸ்துவின் இரத்தத்தில் ... | 12 |
| 3. பெண்கள் பகுதி | 16 |
| 4. வாலிபர் பகுதி | 19 |
| 5. சிறுவர் பகுதி | 22 |
| 6. தேவப்பிள்ளையே உன்னை ... | 24 |
| 7. தேவனைப் படைத்தது யார் ? | 28 |
| 8. வசனிதியான கிறிஸ்துவின் சபை | 32 |


- ஒன்றுக்கும் மேற்பட்ட இதழ்கள் வந்தால் எங்களுக்கு தெரியப்படுத்தவும்.
- **முகவரி மாற்றத்தை கண்டிப்பாக கடிதம் மூலம் தெரியப்படுத்தவும்.**
- **இந்த இதழ் மூலம் நீங்கள் அடையும் பயன்களை எங்களுக்கு எழுதவும்.**
- அஞ்சல் வழியில் வேதாகமம் படிப்பவர்கள் உங்களது தொலை/ அலைபேசி எண்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். தாமதத்தைத் தவிர்க்க இது உதவும்.

– ஆசிரியர்.

# THIRUMARAI AASAAN

**S. Rajanayagam**

**Editor**

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385

**Pleading for the restoration of pure New Testament Christianity**

Vol. 28 | July - 2015 | Issue - 7


ஆசிரியர் உரை

## என் ஆவி பிரியமட்டும்... உத்தமத்தை... விலக்கேன்

இப்பூமியின் வாழ்க்கையில், நம் ஒவ்வொருவருக்கும் பிடித்த மானவர்கள் என்றும், மிகவும் பிடித்தமானவர்களென்றும் சிலபேர் இருப்பர். அப்படிப் பட்டவர்களை நாம் அதிகமாக நேசிப்போம், மிகவும் உயர்வாக மதிப்போம். அவர்களைப் பற்றி நாம் பிறரிடம் பேசும் போதும், சில நேரங்களில் அவர்களை மற்றவர்களுக்கு அறிமுகம் செய்யும்போதும், மிகச் சிறந்த வார்த்தைகளைப் பொறுக்கியெடுத்து அவர்களுக்காகப் பயன்படுத்தி, அதன் மூலம் அவர்கள் மீது நமக்கிருக்கும் அன்பையும், மரியாதையையும் வெளிப்படுத்துவோம். இப்படி செய்வது நம் எல்லோருக்கும் பொதுவான ஒன்று தான். ஆனால், இது மனிதர்களாகிய நமக்கு மட்டும் தான் சொந்தம் என்று நாம் நினையாதபடி, இதே பாணி பரிசுத்த வேதாகமத்திலும் பரலோகத்தின் தேவனால் கடைப் பிடிக்கப்பட்டிருப்பது கவனிக்கத்தக்கது. ஆம், பல தேவதாசர்களை, தேவன் சிறந்த அடைமொழிகளால் நமக்கு அடையாளம் காட்டியிருக்கிறார்.

பெருவெள்ள காலத்துப் பிரசங்கியாகிய நோவாவை தேவன், நீதிமான் என்றும், உத்தமன் என்றும் கூறுகிறார். ( ஆதி 6:9 ) இதே பதங்கள், புதிய ஏற்பாட்டில், இயேசுவின் சரீரத்தைப் பிலாத்துவிடம் வாங்கி அடக்கம் செய்த அரிமத்தியா ஊரானாகிய யோசேப்புக்கும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது ( லூக்.20:50,51 ). மேலும், அப்போஸ்தலர் 18-ஆம் அதிகாரத்தில், அலெக்சாந்திரியா பட்டணத்து அப்பொல்லோ என்பவனைக் குறித்து சாதுரியவானென்றும், வேதாகமங்களில் வல்லவன் என்றும் தேவனால் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. ( அப் 18:24 ) இப்படி வேதாகமம் சிலருக்கு

சிறப்பான அறிமுகம் கொடுத்தாலும், பக்தன் யோபுவுக்கு தேவனால் கொடுக்கப்பட்ட அறிமுகம் போல வேறு யாருக்கும் கொடுக்கப்படவில்லையென்று நாம் தைரியமாகவே அடித்துக் கூறலாம். ஒருவேளை, ஏசாயா 9:6 -ல் நம்முடைய இரட்சகர் இயேசுவுக்கு, அவர் பிறப்பதற்கு 700 ஆண்டுகளுக்கு முன்பாகவே, அதிசயமானவர் ஆலோசனைக் கர்த்தர், வல்லமையுள்ள தேவன்,நித்தியபிதா, சமாதான பிரபு என்று சொல்லப்பட்டிருக்கிறதே என்று நீங்கள் கேட்கலாம். அது நியாயம் தான். ஆனால், அவர் தேவமைந்தன் ஆயிற்றே! அவருக்கு ஈடும், இணையும் உண்டா? முழுக்க முழுக்க நம்மைப் போன்றதொரு மனிதனாகிய யோபுவை மீட்பரோடு ஒப்பிட முடியுமா? முடியாது தானே.

சரி, மிகச் சிறந்ததொரு அறிமுகத்துக்குச் சொந்தக்காரனாகிய யோபுவைக் குறித்து தேவன் தமது வசனங்களில் இவ்விதம் வர்ணிக்கிறார். உத்தமன், சன்மார்க்கன், தேவனுக்குப் பயப்படுகிறவன், பொல்லாப்புக்கு விலகுகிறவன் (யோபு 1:1). இந்த நான்கு சொற்றொடர்களையும் கவனித்தால், இப்படியும் ஒரு மனிதன் இருந்திருப்பானா என்று தான் எண்ணத் தோன்றுகிறது. இன்னும், இவ்வார்த்தைகளுக்கான பொருளை ஆராய்ந்தால், இவனைப் பற்றி பேசுவதற்கு நமக்கு என்ன அருகதை இருக்கிறதென்று நினைக்கச் செய்கிறது!

இப்பொழுது இவனுக்காக தேவன் பயன்படுத்தியிருக்கும் வார்த்தைகளின் பொருளைக் கவனிப்போம். உத்தமம் என்பதற்கான பொருள், ஒரு போதும் பாவமே செய்யாத நிலையல்ல. ஆனால், பாவத்திலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு, மீண்டும் தன்னை பாவத்திற்கு அடிமைப்படுத்தாததொரு நிலை என்று சொல்லலாம். இங்கே நான் ஒன்றைக் கேட்கிறேன். இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட்டு விட்டேன் என்று சொல்லுகிற அநேகரால் இந்த உத்தம நிலையை எட்டிப்பிடிக்க முடிந்திருக்கிறதா? சிந்திப்போம். அடுத்து, சன்மார்க்கன். இவ்வார்த்தை நமக்கு அதிக பழக்கமில்லாத வார்த்தைபோல தெரியும். ஆனால், இது நமக்கு அதிகம் பழக்கமுள்ள துன்மார்க்கத்திற்கு எதிரான வார்த்தை. ஒழுக்கக்கேடற்ற, நீதிநெறி பிறழாத வாழ்க்கையை அடையாளப்படுத்துவது, மூன்றாவது, தேவனுக்குப் பயப்படுகிறவன் இன்றைக்குப் பலர், காரணம் தெரியாமல் ஒரு தெய்வத்திற்கும், தெய்வங்களென்று கருதப்படுபவைகளுக்கும் பயப்படுகிறார்களல்லவா, அது போன்ற பயமல்ல யோபுவின் பயம். மாறாக, சர்வவல்ல தேவனுடைய மகிமை, மாட்சிமை, மகத்துவம் போன்றவற்றை அறிந்து, உணர்ந்து, அதனடிப்படையில் பெற்று கொண்ட பயம். நான்காவது, பொல்லாப்புக்கு விலகுதல் பொல்லாப்பு எது என்றும், பொல்லாப்பு அல்லாதது எது என்றும், நமக்குக் காட்டுவது தேவனுடைய வார்த்தைகள் தான். அப்படியானால், இவன் தேவனுடைய வார்த்தைகளைத் தெரிந்து, அதனடிப்படையில், பொல்லாப்பு எது அல்லது எவைகள் என்பதைக் கண்டறிந்து, அவைகளுக்குத் தன்னை முற்றும் விலக்கி

காத்துக் கொண்டதோர் வாழ்க்கை நடத்தியவன். அப்பப்பா, எவ்வளவு பெரிய மனிதன் இந்த யோபு என்று எண்ணிப் பாருங்களே! தேவன், இவனைப்பற்றி இத்தோடு நிறுத்தினாரா? இல்லை. இன்னொன்றும் இருக்கிறது கவனியுங்கள்.இவனைப் போல் பூமியில் ஒருவனும் இல்லையாம் (யோபு 1:8). இதற்கு மேல், என்ன வேண்டும்?

சரி, இப்படி பரலோகத்தின் தேவனாலே வெகுவாக மெச்சப்படுமளவுக்கு, வியத்தகு வாழ்க்கை வாழ்ந்த பக்தன் யோபு, தன் வாழ்க்கையின் ஒரு கட்டத்தில், தனக்கு ஏற்பட்ட கதியைக் கேள்விப்பட்டு தனக்கு ஆறுதல் சொல்லவும், தன்னோடு சேர்ந்து பரிதபிக்கவும், தூரத்திலிருந்து வந்த நண்பர்களிடம் மிகவும் உறுதிப்பட, என் ஆவி பிரியுமட்டும், என் உத்தமத்தை என்னை விட்டு விலக்கேன் என்று கறாராகக் கூறுகிறான் ( யோபு 27:5 ) தேமானியனான எலிப்பாசும், சூகியனான பில்தாத்தும், நாகமாத்தியனான சோப்பாரும், தங்கள் நண்பனாகிய யோபுவின் சரீரத்திலும், மனத்திலும் ஏற்பட்ட காயங்களுக்கு தங்கள் வார்த்தைகளால் மருந்து போடுகிறோம் என்று எண்ணிக்கொண்டு, வெந்த புண்ணில் வேலைப்பாய்ச்சும் வேலையை வெகுநேர்த்தியாகச் செய்தார்கள். சொல்லப்போனால், யோபுவுடனான அவர்களின் வாதமும், பிரதிவாதமும், ஒருவனை ஆடையில்லாமல் சுடுமணலில் போட்டு புரட்டுவது போலும், வாணலியில் போட்டு வறுத்தெடுப்பது போலவுமே இருந்தது. சிநேகிதன் எல்லாக் காலத்திலும் சிநேகிப்பான் ( நீதி 17:17 ) என்ற ஞானியின் கூற்றைத் தூக்கிக் குப்பைத் தொட்டியில் போட்டவர்களாகவே தங்கள் பேச்சை ஆரம்பித்து, தொடர்ந்து, பிறகு முடிக்கவும் செய்தனர்.

ஒரு கட்டத்தில், யோபுவின் நண்பர்கள் மூவரும் ஏகோபித்த குரலில், நான் பாவம் செய்தேன், ஆகவே, மனந்திரும்புகிறேன் என்று யோபு சொல்லியே ஆக வேண்டும், அப்பொழுது தான் அவனுக்கு விடுதலை என்று நெருக்க ஆரம்பித்தனர். அப்பொழுது கொஞ்சம் பொறுமையிழந்த இந்தப் பொறுமையின் சிகரம், அந்தப் பேச்சுக்கே இடமில்லையென்பதை அவர்கள் திட்டவட்டமாகத் தெரிந்து கொள்ளும்படி, என் ஆவி பிரியும் மட்டும், என் உத்தமத்தை என்னை விட்டு விலக்கேன் என்று இடியாய் முழங்கினார். வீம்புக்கோ, வீராப்புக்கோ யோபு இந்த வார்த்தைகளைப் பேசாமல், விசய ஞானத் தோடே தான் பேசியிருக்கிறார் என்பதை, பிற்பாடு பரலோகத்தின் தேவன் இவனுக்குக் கொடுக்கும் சாட்சியிலிருந்தும், இவன் பெற்றுக் கொண்ட இரட்டிப்பான ஆசீர்வாதத்திலிருந்தும் நாம் தெரிந்து கொள்ள முடியும்.

ஆனாலும், யோபு இவ்வார்த்தைகளைத் தன் நண்பர்களிடம் கூறிய பொ முது, அவனுக்கிருந்த சூழ்நிலையைக் கண்முன் கொண்டு வந்து பார்த்தால் உடம்பெல்லாம் சிலிர்க்கிறது. சில வேளைகளில், ஒரு வார்த்தையோ அல்லது

வாக்கியமோ எந்த சூழ்நிலையில் சொல்லப்படுகிறதென்பதைப் பொறுத்து அதற்கான முக்கியத்துவம் இருக்கும். உதாரணமாக, கிறிஸ்தவம் மன்னிப் பின் மார்க்கம் என்று உலகெங்கும் அங்கீகரிக்கப்பட்டதற்குக் காரணம், இயேசு, மலைப்பிரசங்கத்திலோ அல்லது ஊழிய நாட்களிலோ மன்னிப்பு பற்றிப் பேசியது மட்டுமல்ல. மாறாக, கொல்கொதா மலையில், அந்தக் கொடுஞ் சிலுவையில், பிதாவே, இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செகிறது இன்ன தென்று அறியாதிருக்கிறார்களே என்று சொன்னது தான். (லூக் 23:34). ஆக, சொல்லப்படும் ஒன்று, எந்தச் சூழ்நிலையில் சொல்லப்படுகிறதென்பதைப் பொறுத்து அதன் முக்கியத்துவம் கூடுகிறது அல்லது குறைகிறது.

அப்படியானால், பக்தன் யோபு, என் ஆவி பிரியுமட்டும் என் உத்தமத்தை என்னை விட்டு விலக்கேன் என்று எந்தச் சூழ்நிலையில் சொன்னார் என்பதை நாம் கவனிக்க வேண்டுவது அவசியம். அப்பொழுது தான், யோபுவின் உத்த மத்தின் மேன்மை நமக்கு விளங்கும். அப்பொழுது தான், அந்த உத்தமம், நம் முடைய வாழ்க்கைக்கு என்ன பாடம் கற்றுக் கொடுக்கிறதென்று நாம் அறிந்து கொள்ள முடியும். அப்பொழுது தான், அவன் உத்தமத்தை நாமும் பின்பற்றி வாழ முடியும். இப்பொழுது யோபு சொன்ன சூழ்நிலையைக் கவனிப்போமா?

## I. தனது செல்வங்களை இழந்தான்

என் ஆவி பிரியுமட்டும் என் உத்தமத்தை என்னை விட்டு விலக்கேன் என்ற அவ்வார்த்தைகளை அவன் உதிர்த்த பொழுது, தன் செல்வங்களை இழந்திருந்தான்.

யோபுவுக்கு இருந்த செல்வங்கள் கொஞ்சமா என்ன? இன்றைக்கு செல்வந்தர்களுக்கான தரப்பட்டியல் வெளியிடுவது போல, அன்றைக்கு ஒரு வேளை தரப்பட்டியில் வெளியிட்டிருந்தால், இவன் தான் நம்பர் ஒன்றாக இருந்திருப்பான் என நினைக்கிறேன். 7000 ஆடுகள். ஒரு 100 ஆடுகளும் அதற்கான மேச்சல் நிலமுமிருந்தால், இன்றைக்கு ஒருவன் பண்ணையார் என்று அழைக்கப்படுகிறான். அப்படியானால், யோபுவை எப்படி அழைப்பது? சொல்லத் தேவையில்லை அப்படித்தானே! அடுத்து, 3000 ஒட்டகங்கள். ஆடுகள் ஆயிரங்களில் என்பது ஓரளவுக்கு விளங்குகிறது. ஆனால், ஒட்டகங்கள் 3000 என்பது சரியாக அறிவுக்கு எட்டவில்லைதானே. ஒருவேளை, போக்குவரத்து வசதிகள் இல்லாத அந்நாட்களில், போக்குவரத்து ஊர்திகளாக ஒட்டகங்களே பயன்படுத்தப் பட்டிருக்க வேண்டும். அப்படியானால், அன்றைய நாட்களின் போக்கு வரத்து அனைத்தையும் தன் கட்டுப்பாட்டிலே வைத்து, பஸ் அதிபர் என்பது போல ஒட்டக அதிபராக இருந்திருப்பானோ நம் யோபு. அடுத்து, 500 ஏர்மாடுகள். இரண்டு ஏர்மாடுகள் போதும், 5-10 ஏக்கர் வரை உழுவதற்கு. அப்படியானால், இவனுக்கிருந்த விளை நிலத்தின் அளவும், நிலபுலங்களின் அளவும் தான் எவ்வளவு? இவை

போதாதென்று கழுதைகள் வேறு 500 ஆம். பொதி சுமப்பதற்கான மிருகம் தான் கழுதை. அப்படியானால் இவ்வளவு கழுதைகள் எதற்கு? 500 கழுதைகளும் எதைச் சுமந்திருக்கும்? பரந்து விரிந்த அவனது நிலங்களில் விளைந்து, அறுத்து, களங்களில் குவிந்தவைகளை வீடு கொண்டு வந்து சேர்க்க கழுதைகள் பயன்பட்டிருக்குமோ? நம்முடைய ஊகம் சரியானால், இவன், பஸ் அதிபராக மாத்திரமல்ல, லாரி அதிபராகவும் இருந்துள்ளான்.

அன்பர்களே, இவையனைத்தையும், ஒரே நாளில் இழந்து விட்ட நிலையில் தான், (யோபு 1:1317) என் உத்தமத்தை என்னை விட்டு விலக்கேன் என்று யோபு கூறியுள்ளான் என்பதை கவனிக்க மறந்து விடாதீர்கள். இங்கே, நம்முடைய உத்தமம் எந்தளவு உள்ளதென்பதை நிதானித்துப் பாருங்கள்.

## II. பெற்று வளர்த்த பிள்ளைகளை இழந்தான்.

என் ஆவி பிரியுமட்டும் என் உத்தமத்தை என்னை விட்டு விலக்கேன் என்ற போது, தான் ஆசையோடு பெற்று, பாசத்தோடு வளர்த்த பிள்ளைகளனை வரையும் ஒரு சேர இழந்திருந்தான்.

வேத வசனங்கள் அவனுக்கு, 7 குமாரர்களும், 3 குமாரத்திகளும் பிறந் தார்கள் என்று சொல்கிறது (1:2). இந்த யோபு, தன் பிள்ளைகளை எவ்வளவு நேசித்தான் என்பதற்குச் சான்றாக யோபு 1:5 நாம் காட்டலாம். அங்கே, தன் பிள்ளைகள் இருதயத்திலே தேவனை தூஷித்திருப்பார்கள் என்று சொல்லி, எல்லோருடைய இலக்கத்தின்படியும் சர்வாங்க தகன பலி செலுத்துவானாம் இன்றைக்குப் பிள்ளைகள் வெளிப்படையாகச் செய்த தவறுகளுக்கே வக்காலத்து வாங்கும் பெற்றோர்களைத் தான் சமுதாயத்தில் பார்க்க முடிகிறதேயொழிய, மற்றபடி பிள்ளைகளின் பாவங்களுக்குப் பரிகாரம் தேட முயற்சிக்கும் பெற்றோர்கள் எங்கே இருக்கிறார்கள்? பூத கண்ணாடி வைத்துத் தேடினாலும் கண்டுபிடிக்க முடியாது. ஆனால், யோபு பிள்ளைகளை நேசித்து, அவர்கள் ஆத்தும நலனில் அக்கறை செலுத்தியுள்ளான்.

இப்படி தான் இவ்வளவு நேசித்த பிள்ளைகளை நொடியில் இழந்தான். பிள்ளைகள் பெற்றோரை இழப்பது வேதனை தரத்தக்கது தான் என்றாலும், பெற்றோர்கள் பிள்ளைகளை இழக்கும் துக்கத்திற்கு அது ஈடாகாது. பெற்றோரின் உடம்பில் பிள்ளைகளின் இரத்தம் ஓடுவதில்லை. ஆனால், பிள்ளைகளின் உடம்பில் பெற்றோரின் இரத்தம் ஓடுகிறது. பெற்றெடுத்த பிள்ளைகளில் ஒன்றை இழப்பதே தாங்க முடியாததாக இருக்கும்பொழுது, பத்துப் பேரையும் ஒருசேர இழப்பதென்பதை எண்ணிப்பார்க்கவே பயங்கரமாக உள்ளது. யோபுவின் மனம் எப்படித் துடியாய் துடித்திருக்குமென்று கற்பனை செய்து பார்க்கவே மனம் மறுக்கிறது. வேத வசனங்கள் அவன் துக்கம் மகா கொடிய துக்கம் என்றே விளம்புகிறது. இப்படிப்பட்ட துக்கம் வேறு யாருக்கும் வரவேண்டாமென்றுதானே எண்ணத் தூண்டுகிறது.

III. **சரீர சுகத்தையும், மனைவியின் அன்பையும் இழந்தான்.**

என் ஆவி பிரியுமட்டும் என் உத்தமத்தை விட்டு விலக்கேன் **என்று அவன் சொன்ன போது, தன் சரீர சுகம் அனைத்தையும், மனைவியின் அன்பையும் இழந்திருப்பான்.**

**நோயற்ற வாழ்வின் அருமை நோய் வந்த பிறகு தான் ஒருவனுக்குத் தெரியும். ஒருவனுக்கு வரும் வியாதிகளையெல்லாம் நாம் ஒரே ரகத்தில் எடுத்துக் கொள்ள முடியாது. அவைகளில், மரணத்துக்கேதுவானவைகளும் உண்டு. மரணத்துக்கேதுவற்றவைகளும் உண்டு. இங்கே யோபுவுக்கு வந்த வியாதி முதல் ரகம். கொடிய வியாதி. உள்ளங்கால் தொடங்கி உச்சந்தலை மட்டும் கொடிய பருக்கள். இந்த வியாதியின் தன்மை பற்றிக் கூறும் ஒரு வேத அறிஞன்.** இது குஷ்டரோகமல்ல, ஆனால், குஷ்டத்திற்கு எந்த வகையிலும் குறைவானதல்ல **என்று விளக்குகிறார். அப்படியானால், அந்த வியாதியால், அவன் அடைந்த சரீர வேதனையும், அது தந்த மன வேதனையும் எந்தளவு இருந்திருக்குமென்று எண்ணிப் பாருங்கள்.**

**அவனுக்கு ஏற்பட்ட வியாதியின் கொடுமையைக் கண்ணுற்ற அவன் மனைவி, அவனைப் பார்த்து, மிகவும் கிண்டலாக,** நீர் இன்னும் உம்முடைய உத்தமத்தில் உறுதியா நிற்கிறீரோ? **என்று சொன்னதோடு, அட மனுஷா, உன்னை இவ்வளவு பாடுபடுத்தும் தேவனை தூஷி என்றும் சீண்டிவிடுகிறாள். (2:9) அவன் வியாதி, கடுமையானது தான் என்பதற்கு அவன் மனைவியின் இவ்வாக்கியம் தவிர வேறு என்ன சான்று வேண்டும்? போதாததற்கு அவனுடைய நண்பர்கள் வேறு, தங்கள் கண்களை ஏறெடுத்துப் பார்த்து, அவனை உருத்தெரியாமல் சத்தமிட்டு அழுதிருக்கிறார்கள் ( 2:11 ) யோபுவே கூட, தன் பிறந்த நாளை சபித்திருக்கிறானென்றால் பார்த்துக் கொள்ளுங்களே! ( 3:3 ) அவன் சரீரத்தில் பட்ட வேதனைகளுக்கு இதற்கு மேல் விளக்கமே தேவையில்லை.**

**அன்பானவர்களே ! இப்படிப்பட்ட அகோர நிலையில் தான், இப்பழம் பெரும் பக்தன் யோபு,** என் ஆவி பிரியுமட்டும் என் உத்தமத்தை என்னை விட்டு விலக்கேன் **என்று கூறியுள்ளான். நாமும் தான் நம்மை பக்திமான்கள் என்று அழைத்துக் கொள்கிறோம். யோபுவுக்குப் பக்கத்தில் போக முடியுமா?**

VI. **நண்பர்களின் நம்பிக்கையை இழந்ததோடு, கண்டனத்துக்கும் உள்ளானான்.**

என் ஆவி பிரியுமட்டும் என் உத்தமத்தை என்னை விட்டு விலக்கேன் **என்று அவன் முழங்கிய போது, தன் பிராண சிநேகிதர்களின் நம்பிக்கையை இழந்ததோடு, அவர்களின் கடுமையான கண்டனத்துக்கும் உள்ளாகியிருந்தான்.**

யோபுவின் புத்தகத்தின் பெரும்பகுதி, அவனுக்கும், அவனது நண்பர்களுக்கும் இடையே நடந்த உரையாடல்களைக் கொண்டதாகவே உள்ளது. இந்நண்பர்கள் மூவரும், யோபு அழைத்து வந்தவர்களல்ல. மாறாக, நடந்தவைகளைக் கேள்விப்பட்டு வந்தவர்கள். வந்து யோபுவுக்கு நேர்ந்த கதியைக் கண்டு, கலங்கி, தங்கள் சால்வைகளைக் கிழித்து, தங்கள் தலையின்மேல் புழுதியை தூற்றிக் கொண்டவர்கள். அத்தோடு, அவன் நிலையைக் கண்டு விம்மி, விக்கி ஒரு வார்த்தையும் பேசாமல், இரவுபகல் ஏழுநாள் அவனோடே கூடத் தரையில் உட்கார்ந்தார்கள்.

இந்தளவு யோபுவை நேசித்த நண்பர்களின் நம்பிக்கையை யோபு இழந்து, இங்கே நிராதரவாகக் காட்சி தருகிறான். ஆம், ஆறுதல் தந்து தேற்றுவார்களென்று எதிர்பார்க்கப்பட்ட நண்பர்கள், யோபுவை வார்த்தைகளால் வாட்டி வதைத்தனர். தேமானியனான எலிப்பாசு, குற்றமில்லாமல் அழிந்தவன் உண்டோ? என்றும், நான் கண்டிருக்கிற படி அநியாயத்தை உழுது, தீவினையை விதைத்தவர்கள் அதையே அறுக்கிறார்கள் (4:7,8) என்றும் சொல்லி, தப்புத் தாளத்திற்கு தாயம் போட்டான். இவன் பேசுவதைக் கண்டு அதிர்ந்து போன யோபு, இப்படிப்பேசி என்னை வார்த்தைகளால் வதைக்காமல், நான் எதிலே தவறினேனோ அதை எனக்குத் தெரியப்படுத்துங்கள் என்று கெஞ்சுகிறான் (6:24) ஆனால், கிஞ்சித்தும் இரக்கமில்லாத பில்தாத்தோ, தேவன் நியாயத்தைப் புரட்டுவாரோ? என்று கூறியதோடு, தேவன் உத்தமனை வெறுக்கிறதில்லை என்ற கண்டுபிடிப்பையும், தன்னுடைய மேதாவித் தனத்தையும் வெளிப்படுத்துகிறான். (8:3,20) இந்த உண்மை யோபுவுக்குத் தெரியாதா என்ன? தன்னுடைய இரண்டு நண்பர்கள், இப்படி அர்த்தமில்லாமல் பேசி அடம் பிடிப்பதைக் கண்ட யோபு, இனி இவர்களிடத்தில் பேசி எந்தப் பயனும் இல்லையென்று கண்டு, தேவனுடைய மகத்துவங்களைப் பேசஆரம்பிக்கிறான். ஆராய்ந்து முடியாத பெரிய காரியங்களையும், எண்ணி முடியாத அதிசயங்களையும் அவர் செய்கிறார் (9:10) என்றும், இதோ, அவர் பறித்துக் கொண்டு போகிறார், அவரை மறிப்பவன் யார்? நீர் என்ன செய்கிறீர் என்று அவரைக் கேட்பவர் யார்? என்றும் பேசஆரம்பித்தான். (9:12). இதைக்கண்ட அந்த மூன்றாவது நண்பனாகிய சோப்ளாங்கி சோப்பார். வாய்ச் சாலகன் நீதிமானாய் விளங்குவானோ? என்று கூறி, யோபுவை ஒரு வாயாடி என்று வாய் கூசாமல் கூறுகிறான் (11:2).

இவர்களின் சொல் அடி தாங்க முடியாத யோபு, ஒரு கட்டத்தில், கையெடுத்துக் கும்பிடாத குறையாக, இப்போதும் நீங்கள் எல்லாரும் போய் வாருங்கள் என்றான். (17:10) இச்சமயத்தில், அவன் இருதயம் எப்படியிருந்திருக்குமென்று எண்ணிப் பாருங்கள். அப்போதும், அவர்கள் தங்கள் போக்கை மாற்றிக் கொள்ளாததைக் கண்டு கண்ணீரும்,

கம்பலையுமாக, நீங்கள் எந்த மட்டும் என் ஆத்துமாவை வருத்தப்படுத்தி, வார்த்தைகளால் என்னை நொறுக்குவீர்கள்? என்று அலறியுள்ளான்.

அருமையான தேவப்பிள்ளையே, தன் நண்பர்கள், இப்படித் தன்னை ஈனப்படுத்திய நிலையிலும், யோபு, என் ஆவி பிரியுமட்டும் என் உத்தமத்தை என்னை விட்டு விலக்கேன் என்று கூறியுள்ளதை கவனிக்க மறந்து விடாதீர்கள். கவனிப்பதோடு நிறுத்தியும் விடாதீர்கள், செயல்படுத்துங்கள்.

## V. மரியாதையை இழந்தான்.

என் ஆவி பிரியுமட்டும் என் உத்தமத்தை என்னை விட்டு விலக்கேன் என்று சொன்ன போது, தன் மரியாதையையும் இழந்து விட்டவனாக இருந்துள்ளான் என்பதை நாம் கவனிக்கத் தவறக்கூடாது.

ஒரு மனிதனுக்கு மானமும், மரியாதையும் மிகவும் முக்கியம். உணவு இல்லாமலும், உடையில்லாமலும் கூட எப்படியோ நாட்களைக் கடத்தலாம். ஆனால், மரியாதை இல்லாமல் வாழ்வது அவ்வளவு சுலபமானது அல்ல. ஒருவேளை, ஆரம்பம் முதலே மரியாதை அற்ற ஒரு வாழ்க்கை வாழ நேர்ந்திருந்தால் அது வேறு விஷயம். ஆனால், மரியாதை யோடு வாழ்ந்து, பிறகு அதை இழக்க நேருவது வேதனையிலும் வேதனை. செய்தித்தாள்களிலே இடம் பிடிக்கிற அநேக தற்கொலைகளுக்குக் காரணம் மானப் பிரச்சனையும், மரியாதைப் பிரச்சனையும் தான்.

யோபுவுக்கு இருந்த செல்வத்திற்கும், செல்வாக்கிற்கும், ஒழுக்கத்திற்கும், பக்தி நிலைக்கும் அவன் எவ்வளவு மரியாதையோடு வாழ்ந்திருப்பான் என்பதை நாம் சொல்ல தேவையில்லை. அப்படி மரியாதையோடு ஜீவித்த யோபு, தான் எந்தளவு மரியாதையை இழந்து, தாழ்ந்து கிடந்தான் என்பதை அவன் வாயாலேயே சொல்வதைக் கேளுங்கள். இப்போதோ என்னிலும் இளவயதானவர்கள் என்னைப் பரியாசம் பண்ணுகிறார்கள், இவர்களுடைய பிதாக்களை நான் என் மந்தையைக் காக்கும் நாய்களோடே வைக்கவுங்கூட வெட்கப்பட்டிருப்பேன் என்று. (30:1) அப்பப்பா, யோபு சொல்வது கொஞ்சம் கூட என்பது போல தெரிந்தாலும், அவன் எவ்வளவு மரியாதையோடு வாழ்ந்திருக்கிறான் என்பதைத் தெரிந்து கொள்ள அது உதவுகிறது. ஆனால், இவைகளெல்லாம், கடந்த காலக் கதையாக அவன் வாழ்க்கையில் மாறிவிட்டது.

ஆனால், இந்த நிலையிலும், யோபு சொல்லியிருக்கிறான். என் ஆவி பிரியுமட்டும் என் உத்தமத்தை என்னை விட்டு விலக்கேன் என்று. என்னாலும், உங்களாலும் இப்படிச் சொல்ல முடியுமா? சொல்லுங்கள்! சொல்லுங்கள்!!

அன்பான வாசக நண்பரே! நம்முடைய உத்தமம் எந்தளவில் உள்ளது? உத்தமம் என்பது, பாவமே செயாத நிலை அல்ல. மாறாக, பாவத்திலிருந்து

தன்னை விடுவித்துக் கொள்ளும் ஓர் நிலை. யோபு தன் வாழ்க்கையின் ஒரு கட்டத்தில், தன்னை பாவத்திலிருந்து விடுவித்துக் கொண்டு, தன் ஆவி பிரியுமட்டும் தன்னை உத்தமனாகக் காத்துக் கொண்டுள்ளான் என்று தெரிகிறது. நம்மில் எத்தனை பேர் நம்மை வேத வசனங்களின் அடிப்படையில், நம்மைப் பாவத்திலிருந்து விடுவித்துக் கொண்டு யோபுவைப் போல உத்தமர்களாகக் காத்து வருகிறோம்.

யோபுவின் உத்தமத்தைப் படித்துவிட்டு ஆஹா என்று புகழ்வதால் நமக்கு எந்த நன்மையும் இல்லை. மாறாக, நானும் யோபுவைப் போல உத்தமனாக வாழ்வேன் என்று தீர்மானிக்க வேண்டும். தேவன் அதை நம்மிடம் எதிர்பார்க்கிறார்.

யோபுவைப் போல், ஓர் உத்தம வாழ்க்கை நாம் வாழ வேண்டுமானால், நம்மை பாவத்திலிருந்து விடுதலையாக்கிக் கொள்ள வேண்டும். அப்படிப் பாவத்திலிருந்து விடுதலையாக முதலாவது, விசுவாசிக்க வேண்டும் (எபி. 11:6). அடுத்து, மனந்திரும்ப வேண்டும். (2 கொரி 7:10) பிறகு, இயேசு தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட வேண்டும். (அப். 8:37). இறுதியாக, பாவமன்னிப்புக் கென்று தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள வேண்டும். (அப்.22:16). இவை களைச் செய்யும் போது, பாவத்திலிருந்து விடுபட்டு இரட்சிப்படைவோம். இரட்சிப்பின் நிலை தான், உத்தம நிலை. பெற்றுக் கொண்ட இரட்சிப்பில் நிலைத்திருக்கும் போது, உத்தம வாழ்க்கையை யோபு போல நடத்துகிறவர்களாயிருப்போம்.

இப்படிப்பட்ட உத்தம வாழ்க்கைக்கு, சத்திய வசனங்களின்படி ஒப்புக்கொடுக்க உங்களை வேண்டுகிறேன். ஆமென்! ●

---

## தேவனுக்கு மட்டும் தெரியும்

- சரித்திர சம்பவங்கள் அனைத்தும் துல்லியமாக தேவனுக்கு மட்டுமே தெரியும்.
- நிகழ்கால காரியங்கள் அனைத்தும் அப்படியே தேவனுக்கு மட்டுமே தெரியும்.
- எதிர்கால காரியங்கள் ஒவ்வொன்றும் தேவனுக்கு மட்டுமே தெரியும்.
- குறிப்பிட்ட சூழ்நிலையில் என்னவெல்லாம் நடந்தது என்று தேவனுக்கு மட்டுமே தெரியும்.
- அளவற்ற ஞானமும், அறிவும் தேவனுக்கு மட்டுமே உண்டு.

# ஏன் கிறிஸ்துவின் இரத்தத்தில் வல்லமை இருக்கிறது?

J.C. சோட்

சிலருக்கு இரத்தம் பற்றிப் பேசுவது விரும்பத்தக்க ஒன்றாக இருக்காது. இது ஒரு வெட்டுக் காயத்தையோ, ஒரு புண்ணையோ, ஏன் ஒரு மரணத்தையோ கூட அவர்களுக்கு நினைவுப்படுத்துவதாக இருக்கலாம். மத உலகிலுள்ள சிலர் இரத்தம் என்ற வார்த்தையை தங்கள் வழக்கு மொழியிலிருந்து நீக்கிப்போட முயற்சி செய்தார்கள்.

பழைய ஏற்பாட்டுக் காலங்களில் மனிதனுடைய பாவம் நிவர்த்தியாகும் பொருட்டு மிருக பலிகள் அல்லது இரத்த பலிகள் தேவை என தேவன் சொன்னார். இரத்தத்தில் உயிர் இருந்த படியாலும், அது உயிரை அடையாளப் படுத்தினபடியாலும், இரத்தம் முக்கியமானதாக இருந்தது. இந்த காரணத்திற்காகத்தான் இரத்தம் புசிப்பது தடை செயப்பட்டிருந்தது. மாம்சத்தின் உயிர் இரத்தத்தில் இருக்கிறது; நான் அதை உங்களுக்கு பலிபீடத்தின் மேல் உங்கள் ஆத்துமாக்களுக்காகப் பாவநிவிர்த்தி செயும்படிக்கு கட்டளையிட்டேன்; ஆத்துமாவிற்காகப் பாவ நிவிர்த்தி செய்கிறது இரத்தமே. அதனிமித்தம் உங்களில் ஒருவனும் இரத்தம் புசிக்க வேண்டாம். உங்கள் நடுவே தங்குகிற அந்நியனும் இரத்தம் புசிக்க வேண்டாம் என்று இஸ்ரவேல் புத்திரருக்குச் சொன்னேன் என நாம் (லேவியராகமம் 17:11,12) வசனங்களில் வாசிக்கிறோம்.

பழைய உடன்படிக்கை கூட இரத்தத்தினால் பிரதிஷ்டை செயப்பட்டது. **எபிரெய எழுத்தாளர் இப்படிச் சொல்கிறார்,** எப்படியெனில், மோசே நியாயப் பிரமாணத்தின்படி, சகல ஜனங்களுக்கும் எல்லாக் கட்டளைகளையும் சொன்னபின்பு, இளங்காளை, வெள்ளாட்டுக்கடா இவைகளின் இரத்தத்தைத் தண்ணீரோடும், சிவப்பான ஆட்டு மயிரோடும், ஈசோப்போடுங்கூட எடுத்து, புஸ்தகத்தின் மேலும் ஜனங்கரில்லார் மேலும் தெளிந்து தேவன் உங்களுக்குக் கட்டளையிட்ட உடன்படிக்கையின் இரத்தம் இதுவே என்று சொன்னான். இவ்விதமாக, கூடாரத்தின் மேலும் ஆராதனைக்குரிய சகல பணிமுட்டுகளின் மேலும் இரத்தத்தைத் தெளித்தான். நியாயப்பிரமாணத்தின்படி கொஞ்சங்குறைய எல்லாம் இரத்தத்தினாலே சுத்திகரிக்கப்படும்; இரத்தஞ்சிந்துதலில்லாமல் பாவ மன்னிப்பு உண்டாகாது **(எபிரெயர் 9:19-22). எபிரெய எழுத்தாளர் மேலும் சொல்லும் போது,** இரண்டாங் கூடாரத்திலே பிரதான ஆசாரியன் மாத்திரம் வருஷத்திற்கு ஒரு தரம் இரத்தத்தோடே பிரவேசித்து,

அந்த இரத்தத்தை தனக்காகவும், ஜனங்களுடைய தப்பிதங்களுக்காகவும் செலுத்துவான் என சொல்கிறார் (எபி ரெயர் 9:7).

பிறகு, எபிரெய எழுத்தாளர் இப்படியாக முடிக்கிறார் அல்லாமலும், காளை, வெள்ளாட்டுக்கடா இவைகளுடைய இரத்தம் பாவங்களை நிவிர்த்தி செய்ய மாட்டாதே (எபிரெயர் 10:4). பலியிடப்பட்ட மிருகங்கள் மந்தையின் பழுதற்றதாக, கறையற்றதாக இருந்தாலும் கூட அவைகள் மிருகங்கள் தானே. ஆகையால், அங்கே ஒரு பூரண பலி தேவைப்பட்டது. மிருகங்களின் இரத்தம் அந்த பூரண பலிக்கு நிழலாகவே இருந்தது. மிருகங்களினால் பாவத்தை எடுத்துப் போட முடியாமல் போனதினாலும், மனிதன் தானே பாவியாக இருந்து, தன்னையோ, மற்றவர்களையோ இரட்சிக்க முடியாது என்பதாலும் பூரண பலியாக யார் இருக்க முடியும் என்கிற கேள்வி எழுந்தது. அது ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து ஒருவரைத் தவிர வேறு யாரும் இருக்க முடியாது. கிறிஸ்து பாவமில்லாமல் வாழ்ந்தார். அவர் பாவஞ்செயவில்லை என்று பேதுரு சொன்னார் (I பேதுரு 2:22). கிறிஸ்து பாவமில்லாத வாழ்க்கை வாழ்ந்து, நியாயப்பிரமாணத்தை முழுமையாகக் கைக்கொண்டு சோதனைக்கு அடிபணியாமல் இருந்ததால் தான் இந்த உலகத்தின் பாவங்களுக்காக சிலுவையில் மரிக்க முடிந்தது.

கிறிஸ்துவின் இரத்தத்தை வலியுறுத்துகிற சில பாடல்களை நாம் பாடுகிறோம். ஆட்டுக்குட்டியின் இரத்தத்தில் வல்லமை உண்டு என்றதொரு பாடலைப் பாடுகிறோம். இயேசுவின் இரத்தத்தைத்தவிர வேறு எதுவும் என் பாவத்தைக் கழுவ முடியாது இவைகளின் இரத்தத்தைத் தண்ணீரோடும், சிவப்பான ஆட்டு மயிரோடும், ஈசோப்போடுங்கூட எடுத்து, புஸ்தகத்தின் மேலும் ஜனங்களெல்லார் மேலும் தெளித்து என்று இன்னொரு பாடல் உண்டு. இந்த வார்த்தைகள் எல்லாம் எத்தனை உண்மையாயிருக்கிறது! இரட்சிக்கக் கூடாத அநேக காரியங்கள் உண்டு. நாம் ஏற்கனவே குறிப்பிட்டபடி, மிருகங்களின் இரத்தம் நம்மை இரட்சிக்க முடியாது. அதுபோல, நியாயப்பிரமாணத்தாலும் நம்மை இரட்சிக்க முடியவில்லை. அது ஜனங்களைக் கிறிஸ்துவண்டை கொண்டு வரத்தான் முடிந்தது. பவுல் இப்படியாகச் சொல்கிறார், அப்படியிராதபடியால், இயேசு கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கிற வாக்கு தத்தம் விசுவாசமுள்ளவர்களுக்கு அளிக்கப்படும்படி வேதம் எல்லாரையும் ஏகமாப் பாவத்தின் கீழ் அடைத்துப் போட்டது. ஆதலால் விசுவாசம் வருகிறதற்கு முன்னே, வெளிப்படப்போகிற விசுவாசத்திற்கு ஏதுவாக நாம் அடைக்கப்பட்டவர்களா நியாயப்பிரமாணத்தின் கீழ் காவல் பண்ணப் பட்டிருந்தோம். இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப் படுவதற்கு நியாயப்பிரமாணம் நம்மைக் கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்துகிற உபாத்தியா இருந்தது. விசுவாசம் வந்த பின்பு நாம் உபாத்திக்குக் கீழானவர்கள்ளவே (கலாத்தியர் 3:22-25). நியாயப்பிரமாணத்தின் கிரியை

களினால் நாம் இரட்சிக்கப்பட முடியாது என்பது மாத்திரமல்ல, நம்முடைய நற்கிரியைகளினாலும் கூட இரட்சிப்படைய முடியாது. இது சம்மந்தமாக பவுல், ஏனெனில், முற்காலத்திலே நாமும் புத்தியீனரும், கீழ்ப்படியாதவர்களும், வழி தப்பி நடக்கிறவர்களும், பலவித இச்சைகளுக்கும், இன்பங்களுக்கும் அடிமைப் படவர்களும், துர்க்குணத்தோடும், பொறாமையோடும் ஜீவனம் பண்ணுகிறவர் களும், பகைக்கப்படத்தக்கவர்களும், ஒருவரையொருவர் பகைக்கிறவர் களுமாய் இருந்தோம். நம்முடைய இரட்சகராகிய தேவனுடைய தயையும், மனுஷர் மேலுள்ள அன்பும் பிரசன்னமான போது, நாம் செத நீதியின் கிரியை களினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின்படியே, மறு ஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார். தமது கிருபையினாலே நாம் நீதிமான்களாக்கப்பட்டு நித்திய ஜீவனுண்டாகும் என்கிற நம்பிக்கையின் படி சுதந்தரராகத்தக்கதாக, அவர் நமது இரட்சகராகிய இயேசு கிறிஸ்து மூலமா, அந்தப் பரிசுத்த ஆவியை நம்மேல் சம்பூரணமாய் பொழிந்தருளினார் (**தீத்து 3:3-7**) **என்று எழுதியுள்ளார்.**

**பொன், வெள்ளி போன்றவைகளால் நாம் மீட்கப்படவோ அல்லது இரட்சிக்கப்படவோ இல்லை என்று பேதுரு சொல்கிறார்.** உங்கள் முன்னோர் களால் பாரம்பரியமாய் நீங்கள் அனுசரித்து வந்த வீணான நடத்தையினின்று அழிவுள்ள வஸ்துக்களாகிய வெள்ளியினாலும், பொன்னினாலும் மீட்கப் படாமல், குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப் பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே (**I பேதுரு 1:18,19**). **மனிதன் தன் வாழ்க்கைப்பாதையில் எதை வேண்டுமானாலும் வாங்கலாம் அல்லது எதற்காக வேண்டுமானாலும் லஞ்சம் கொடுக்கலாம். ஆனால், இரட்சிப்பை அவனால் வாங்கவோ அல்லது தான் இரட்சிக்கப் படும்படியா கர்த்தருக்கு லஞ்சம் கொடுக்கவோ முடியாது.**

**ஆகையால், நாம் நம்முடைய நம்பிக்கையை சரீரப்பிரகாரமான காரியங்களின் மீது வைக்காதபடி ஞானமா நடந்து கொள்ள வேண்டும். கடைசியாக, மனிதனுடைய மதங்களோ அல்லது மனுஷருடைய உபதேசங்கள் மற்றும் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவதோ ஒருவரை பரலோகம் கொண்டு செல்லாது. கிறிஸ்து இப்படியாகச் சொன்னார்.** மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள் **(மத்தேயு 15:9) என்று நாம் கள்ளப் போதகர்களுக்கு வாழ்த்துதல் சொன்னால், அவர்களுடைய துர்கிரியைகளுக்கும் பங்குள்ளவர்களாகிறோம் என்று யோவான் சொல்கிறார் (II யோவான் 11). மறுபடியும் பவுல், பிரிவினைகள் உண்டாக்குகிறவர்கள் நம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு ஊழியஞ் செய்யவில்லை என்று கூறுகிறார் (ரோமர் 16:17,18).**

**பாவிகளாயிருக்கிற நமக்கு இரட்சிக்கப்பட ஒரே ஒரு வழிதான் இருக்கிறது. அது, கிறிஸ்துவின் தியாக பலியின் மூலமாகவும், இரத்தஞ்சிந்துதலினாலும்**

தான் சாத்தியம். கிறிஸ்துவின் இரத்தத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிற அநேக வசனப்பகுதிகள் இருக்கின்றன. கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலமாக நாம் தேவனோடு ஒப்புரவாகிறோம் அல்லது தேவனுக்கு நாம் சிநேகிதராகிறோம் என்று பவுல் கூறுகிறார். பவுல் இப்படிச் சொல்கிறார். சகல பரிபூரணமும் அவருக்குள்ளே வாசமாயிருக்கவும், அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி பூலோகத்திலுள்ளவைகள், பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் அவர் மூலமாத் தமக்கு ஒப்புரவாக்கிக் கொள்ளவும் அவருக்குப் பிரியமாயிற்று (கொலோசெயர் 1:19,20). எபேசு கிறிஸ்தவர்களுக்கு பவுல் எழுதும் போது, அவர்கள் ஒரு காலத்தில் தேவனிடத்திலிருந்து தூரமாயிருந்தார்கள். ஆனால், கிறிஸ்துவின் இரத்தத்தினாலே தேவனிடத்தில் சமீபமானார்கள் என்று கூறுகிறார். மேலும், பழைய பிரமாணமாகிய பிரிவினை என்ற நடுச்சுவர் கிறிஸ்துவின் மரணத்தினாலே தகர்க்கப்பட்டு இப்போது யூதர்களும், புறஜாதிகளும் கிறிஸ்துவுக்குள் ஒன்றாயிருப்பதாக பவுல் கூறுகிறார் (எபேசியர் 2:13-17).

கிறிஸ்துவைப் பற்றியும் அவருடைய இரத்தம் பற்றியும் பேசும்போது பவுல், எபேசு கிறிஸ்தவர்களுக்கு இப்படி எழுதுகிறார். அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது (எபேசியர் 1:7). பவுல் கொலேசே கிறிஸ்தவர்களுக்கு, குமாரனாகிய அவருக்குள் அவருடைய இரத்தத்தினாலே, பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது என்கிறார் (கொலோசெயர் 1:14). கர்த்தருடைய பந்தியை ஏற்படுத்தின போது, கிறிஸ்து, இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன் படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது என்றார் (மத்தேயு 26:28). கிறிஸ்துவின் இரத்தத்தினாலே இரட்சிக்கப்பட்டவர்கள் கர்த்தருடைய சபையிலே சேர்க்கப்படுகிறார்கள் (அப்போஸ்தலர் 2:47). பவுல் எபேசு சபை மூப்பர் களிடத்தில் இப்படியாகச் சொன்னார். ஆகையால், உங்களைக்குறித்தும், தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக் கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங் குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள் (அப்போஸ்தலர் 20:28). எபேசியர் 5:25-ல், கிறிஸ்து சரீரத்திற்காக அல்லது சபைக்காக மரித்தார். அதாவது, சபைக்காக தமது இரத்தத்தை சிந்தினார் அல்லது தம்முடைய இரத்தத்தினாலே அதை வாங்கினார் என்று சொல்லப்பட்டிருக்கிறோம். வேறுவிதமாகச் சொன்னால், சபை இருப்பதற்குத் தேவையான கிரயத்தை அவர் செலுத்தினார். அதன் பின்பு, கிறிஸ்தவர்களாக, நாம் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே கழுவப்பட்டிருக்கிறோம். யோவான் இப்படி எழுதினார் அவர் ஒளியிலிருக்கிறது போல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம்; அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும் (I யோவான் 1:7). ●

பெண்கள் பகுதி

# என்னுடைய சமாதானத்தையே உங்களுக்கு கொடுக்கிறேன்

*RACHEAL NAYAGAM*

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதரிகளுக்கு வாழ்த்துக்களை கூறி எழுதுவது. கர்த்தருடைய பெரிதான கிருபையினாலும், இரக்கத்தினாலும் அவருடைய வார்த்தைகளை தியானிப்பதற்கு அவர் கொடுத்த சிலாக்கியத்திற்கு நன்றி சொல்லி நாம் சில பாடங்களைக் கற்றுக்கொள்வோம்.

நம் இருதயம் ஏக்கத்துடன் விரும்பும் பல காரியங்களில் ஒன்று சமாதானம். கலங்கினப் போன இருதயத்துடன் இருக்கும் சீஷர்களிடம் இயேசு இவ்வாறு கூறுகிறார். சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன் (யோவான் 14:27). தன்னை பின்பற்றும் அனைவரும் இதைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று இயேசு விரும்புகிறார். என்னுடைய சமாதானத்தை உங்களுக்கு கொடுக்கிறேன் என்று சொன்னது மட்டும் போதுமா? இல்லை. முந்தியே அவர் தன்னுடைய பங்கை செய்து முடிந்து விட்டார். தன் வார்த்தையினாலும், செய்கையினாலும் சமாதானமான இருதயத்திற்கான மாதிரியை உருவாக்கிவிட்டார். இதன் ஒட்டுமொத்த கருத்தையும் ஒரே வரியில், ஆவியின் சிந்தையோ ஜீவனும், சமாதானமும் என்று ரோமர் 8:6 ல் பரிசுத்த ஆவியானவர் வெளிப்படுத்தியுள்ளார். ஜீவன், சமாதானம்!! ஆனால் இதை அடைந்து கொள்வதென்பது நிபந்தனைக்குட்பட்டது. அப்படியானால் ஆவியின் சிந்தை எதை உள்ளடக்கியதாய் இருக்கிறது? வேதத்தின் துணையோடு பார்ப்போம்.

ஆவிக்குரிய மனுஷனாக ஒருவன் தன்னை வைத்துக் கொள்வதற்கு அவனுக்கு வாஞ்சை இருக்க வேண்டும். ஆவியின் சிந்தை ஜீவனும், சமாதானமும். அநேகருக்கு அந்த வாஞ்சை இல்லை. முதலாவது, அவன் கிறிஸ்தவான மாறி தேவனுடைய வழியில் நடக்க தன்னை நிர்ணயம் பண்ணிக்கொள்ள வேண்டும்.

அருமையானவர்களே! ஆவியின் சிந்தையும், சமாதானமும் மனதில் (அல்லது) சிந்தையில் ஆரம்பிக்க வேண்டும். மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாக வேண்டும் ( ரோமர் 12:2 ). இந்த வசனம் மேல் வசனத்தோடு ஒத்துப்போகிறது. எப்படியெனில், மாம்ச சிந்தை மரணம். ஆவியின் சிந்தையோ ஜீவனும், சமாதானமும் (ரோமர் 8:6). பொதுவாகவே எதை செய்யக்கூடாது என்று கேட்கிறோமோ அதையே செய்யும்படி மனம் சொல்லுகிறது. உதாரணமாக,

அசிங்கமான ஒரு விளம்பரம் நம் மனதைப் பாதிக்கும் போது அந்த எண்ணத்தை மனதில் இருந்து வெளியே கொண்டு வரவேண்டும். உடனே, நம் மனதை வேறு நல்ல நினைவுகள், வேத வசனங்கள் என்று நினைக்கச் செய்ய வேண்டும். அவன் இருதயத்தின் நினைவு எப்படியோ, அப்படியே அவன் இருக்கிறான். (நீதி. 23:7) ஆக, சமாதானம் என்பது வெளியில் அல்ல, நமக்குள் உண்டாக வேண்டும்.

நாம் எதைப் பார்க்கிறோமோ, எதைக் கேட்கிறோமோ அவைகள் நம் சிந்தையைக் கட்டுப்படுத்துகிறது. நம் வீடுகளில் நாமும் நம் பிள்ளைகளும் படிக்கும் புத்தகங்கள், மாத இதழ்கள், பார்க்கும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் இவற்றைப் பற்றி யோசியுங்கள்? அவைகள் மாம்ச சிந்தையைத் தூண்டுகிறதா? அல்லது ஆவியின் சிந்தயையா? ஆவியின் சிந்தை ஜீவனும், சமாதானமும் என்று தேவன் சொன்னதை நினைவு கூறுங்கள். நம் மனதை ஆவிக்குரிய சிந்தனைகளில் நிரப்பினாலேயொழிய ஒருபோதும் நாம் ஜீவனையும், சமாதானத்தையும் பெற்றுக்கொள்ளவே முடியாது.

சரி, நாம் ஆவியின் சிந்தனையோடுதான் வாழ்ந்து கொண்டுள்ளோமா? என்பதை எப்படி பிறர் அறிந்து கொள்வார்கள்?

இருதயத்தில் நிறைவினால் வாய் பேசும் ( மத். 12:34 ) ஒருவருடைய பேச்சிலே ஆவியின் சிந்தை இல்லாமல் இருக்குமானால் அப்படிப் பட்டவர்களுடைய இருதயத்திற்குள் எந்த ஒரு நல்லதும் இல்லை என்பதற்கு இதைவிட நேரடியான ஆதாரம் எதுவுமேஇல்லை. ஆகையால், அவர்களுக்கு ஜீவனும், சமாதானமும் என்பது பெற்றுக்கொள்ள முடியாத ஒன்றேயாகும். மனதை அடக்கி அது தொடர்பாக உள்ள நாவையும் அடக்க வேண்டும். ... உன் வார்த்தைகளினால நீதிமான் என்று தீர்க்கப்படுவாய்; அல்லது உன் வார்த்தைகளினாலே குற்றவாளி என்று தீர்க்கப்படுவாய் என்றார் (மத். 12:37).

தேவன் விரும்பாத மொழி என்ன? முறுமுறுப்பு (பிலி. 2:16; 1கொரி. 10:10). பொய் (வெளி. 21:8) கெட்ட வார்த்தை (கொலோ. 3:8; எபே. 4:29). கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்குதல் (யாத். 20:7). கோள் சொல்லுதல் (லேவி. 19:6; 1தீமோ. 5:13). குற்றம் கண்டுபிடித்தல் (மத். 7:3,5). கடினமான, அன்பற்ற வார்த் தை (நீதி. 31:26). ஓயாத ஒழுக்கு, சண்டை (நீதி. 19:13; 27:15). வழக்கு (1 தெச. 4:11; நீதி. 20:3) பதறிப் பேசுவது (பிரசங்கி 5:2; நீதி. 29:20) வீண் வார்த்தை ( மத். 12:36 ). பிரியமானவர்களே, தேவன் விரும்பாத இம்மொழிகளை நாம் தவிர்த்தால்தான் ஜீவனையும், சமாதானத்தையும் பெற்றுக் கொள்ள முடியும்.

அடுத்ததாக, அவர் கொடுக்கும் இந்த ஜீவனையும், சமாதானத்தையும் பெற்றுக்கொள்ள ஒருவருக்கு நன்றியுள்ள இருதயம் தேவை. ஆவிக்குரிய

வாழ்க்கை அழகு பெற நன்றி அவசியம். ....ஸ்தோத்தரியமல், தங்கள் சிந்தனைகளினாலே வீணரானார்கள். உணர்வில்லாத அவர்கள் இருதயம் இருளடைந்தது ( ரோமர் 1:21 ) என்று தேவன் சொல்லுகிறார். எத்தனை காரியங்கள் நன்றி செலுத்துவதற்கென்று இருக்கிறது!! நம்முடைய வாழ்க்கைக்கே, அதாவது, உயிரோடு இருப்பதற்கே நன்றி சொல்ல வேண்டும். ஏதாவது சாவு வீட்டுக்கு போனால்தான் நாம் இதை உணர்கிறோமே தவிர மற்ற நேரங்களில் நாம் ஏதோ இப்பூமியில் நிரந்தரமாக இருக்கப் போகிறோம் என்று எண்ணி விடுகிறோம். கர்த்தர் நமக்கு கொடுத்த சுகத்துக்காக நன்றி சொல்ல வேண்டும். நம்மால் எழுந்து நடக்க முடியாது என்று சொல்லும் நாட்களுக்கு முன்பாக இப்போது கிடைத்துள்ள நாட்கள் எவ்வளவு சிறப்பானது என்பதை நாம் எண்ணுவதே கிடையாது. வேதாகமம் சுகத்தை விரும்புகிறது. பிரியமானவனே! உன் ஆத்துமா வாழ்வது போல நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாய் இருப்பாயாக. (யோவான் 2) என்றல்லவா நம் சுகம் பற்றி வசனம் சொல்லுகிறது!.

குடும்பம், நண்பர்கள், சரீரப் பிரகாரமான ஆசீர்வாதங்களுக்காக நன்றி சொல்ல வேண்டும்.

இறுதியாக, ஜீவனையும், சமாதானத்தையும் அடைய வேண்டுமானால், நமக்கும், தேவனுக்கும் உள்ள தொடர்புக்கோடு எப்போதும் சரியாக இருக்க வேண்டும். தேவன் சொல்வதை தொடர்ந்து கேட்கிறோமா? வசனத்தை வாசிப்பதன் மூலம்தான் தேவன் சொல்வதைக் கேட்க முடியும் (எபி. 1:1,2). ஆவிக்குரிய சிந்தையையும், சமாதானத்தையும் உலகப்பிரகாரமான பத்திரிக்கைகளோ, இதழ்களோ, வேறு எதுவோ கொடுக்கவே முடியாது. சமாதானம் இல்லையா? தேவனுக்கும், நமக்கும் உள்ள அந்த தொடர்பு கோட்டில் ஏதோ பிரச்சனை.

சரி, நாம் அடிக்கடி தேவனோடு பேசுகிறோமா? எல்லா நேரங்களிலும் அவருடைய பிரசன்னத்தை உணர்ந் தால் அவரோடு பேசுவது சுலபம். எத்தனை பேர் நம்மைசுற்றி இருந்தாலும், நாம் அமைதியாக நம் இருதயத்தை அவருக்கு நேராக்கி, அவரோடு பேசலாம். ( பிலி. 4:6,7ன் படி ....தேவனுக்கு தெரியப்படுத்த வேண்டும்.


ஆக, பிரியமானவர்களே சமாதானத்தை அடைய விரும்பி வாழ்ந்து கொண்டிருக்கும் நாம், அந்த சமாதானம், அதாவது அவர் கொடுக்கும் சமாதானம் ஆவியின் சிந்தையினால் மட்டும் தான் கிடைக்கிறது. ஆவியின் சிந்தையை பெற்றுக் கொண்டு வாழ்வது எப்படி என்று வசனத்தோடு சேர்ந்து பார்த்தோம். தேவன் சொன்னவைகளை வேதத்தில் வாசித்தோம். இப்படிப்பட்ட அன்புள்ள தேவனுக்காக நன்றி சொல்லுவோம். ஆலோசனைக்கு செவி கொடுப்போம். சமாதானத்தை பெற்றுக்கொள்வோம். நிபந்தனைக்கு கட்டுப்படுவோம். தேவன் தாமே உதவி செய்வாராக! ஆமென்!!

●

வாலிபர் பகுதி

# யோசுவாவிடமிருந்து யோசனைகள்

*Bro. Benny Martin*



அன்பார்ந்த வாலிப வாசகர்களுக்கு வானவராம் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். உங்கள் யாவரையும் இக்கட்டுரையின் வாயிலாக சந்திப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். வருடத்திற்கு ஒரு முறை வரும் வசந்த காலம் போல வாழ்க்கையில் ஒருமுறை வரும் வாலிபப்பருவம் வாழ்க்கையில் எதையாவது சாதிக்க வேண்டுமென்று துடித்துக் கொண்டிருக்கிறது. குறிப்பாக வாழ்க்கையில் வெற்றி என்பதற்கான பொருளை பல்வேறுபட்ட மக்கள் பலவிதமாக விளக்குகிறார்கள். சிலருக்கு வெற்றி என்பது செல்வங்களைச் சேர்ப்பதாய் இருக்கிறது. சிலர் நல்ல உறவுகளை தேடிக் கண்டுபிடித்து மகிழ்ச்சியான வாழ்க்கை வாழ்வதை வெற்றியாகக் கருதுவார்கள். ஒருவர் பல்வேறுபட்ட நிலைகளில் வெற்றிக் கனியைப் பறித்தாலும், தேவனோடு சரியான உறவு வைத்துக் கொள்ளவில்லையென்றால் பரிதாபத்திற்குரியவராகிறார். வேறு விதமாகச் சொன்னால், ஒருவர் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும், தன் ஆத்துமாவை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? (மாற்கு 8:36 ). அப்படிப்பட்ட மனிதன் வேதாகமத்தின் அடிப்படையில் வெற்றிபெற்ற மனிதனாகக் கருதப்பட மாட்டான். வெற்றி என்பதற்கான வேதாகமத்தின் அளவுகோல் அலாதியானது. அதே நேரத்தில் உலகத்தின் பார்வையிலிருந்து முற்றிலும் வித்தியாசமானது. வேதாகம வெற்றிக்கு மிகச் சிறந்த உதாரணம் யோசுவா. இந்த யோசுவாவின் வெற்றியின் இரகசியத்தைப் பற்றிய பறவைப் பார்வை இதோ.

## I. யோசுவா தன் வாலிப வயதில் தேவனைத் தேடினார்:

பொதுவாக உலகத்தில் நாம் பார்க்கும்போது பலர் வாலிப வயதில் உலகத்திற்காக வாழ்ந்து விட்டு, வயதான காலத்தில் தேவனுக்காக வாழ வேண்டும் என்று வாஞ்சிக்கின்றனர். ஆனால், இந்த யோவா வாலிப வயதில் தேவனைத் தேடியிருக்கிறார். யோசுவா தேவனுடைய பிள்ளைகளை இரட்சிப்பதற்காக தன் வாலிபப்பிராயத்தை தேவனுக்காக அர்ப்பணித்தார். யோசுவா என்கிற பெயரின் அர்த்தமே இரட்சகன் என்பதாகும். நம்மில் பலருக்கு இந்த யோசுவாவை மோசேயின் மரணத்திற்குப் பிறகு இஸ்ரவேல் ஜனங்களை அந்த கானான் தேசத்துக்குள் வழிநடத்தின ஒருவராகத்தான் தெரியும். இன்னும் சிலருக்கு இந்த யோசுவாவை கானான் தேசத்திற்குள் வேவு பார்க்கச் சென்ற பன்னிரெண்டு

வேவுகாரரில் ஒருவராகவும், அத்தேசத்தைக் குறித்து நற்செய்தி கொண்டு வந்த இருவரில் ஒருவராகவும் தான் தெரியும். யாத்திராகமம் 33:11 -ல் யோசுவா ஒரு வாலிபனாக குறிப்பிடப்பட்டிருக்கிறார். முதன் முதலாக வேதாகமத்தில் யோசுவா என்னும் பெயர் ( யாத். 17:9 ) -ல் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அங்கே அவர் இஸ்ரவேலர்களுக்கும். அமலேக்கியர்களுக்கும் இடையே நடந்த யுத்தத்தில் பங்கெடுத்து அமலேக்கையும் அவன் ஜனங்களையும் பட்டயக் கருக்கினாலே முறியடித்தார். இந்த யோசுவா சீனாய்ப் பர்வதத்தில் தேவன் மோசேக்கு நியாயப்பிரமாணத்தைக் கொடுத்த போது மோசேயோடு மலையில் ஏறும் பாக்கியத்தைப் பெற்றிருந்தார். (யாத். 24:13; 32:17). இவர் வாலிபப் பிராயத்திலே தன் சிருஷ்டிகரை நினைத்தபடியாலும், தேவனுக்கடுத்த காரியங்களில் வைராக்கியம் கொண்டதாலும், தேவன் இவரை இஸ்ரவேல் ஜனங்களைக் கானான் தேசத்திற்குள் வழி நடத்தி, அவர்கள் கோத்திரங்களுடைய பங்குகளின்படியே சுதந்திரமாகக் கொடுத்தார் (யோசுவா 11:23). பிரியமானவர்களே! யோசுவா எல்லாவிதத்திலும் வெற்றியுள்ள மனிதராகவே வாழ்ந்திருக்கிறார். எனவே நாமும் வாலிபப் பிராயத்தில் தேவனைத் தேடுவோமா?.

## II. யோசுவா சரியான மாதிரியைத் தெரிந்தெடுத்தார்:

மோசே தேவனுடைய உண்மையுள்ள ஊழியக்காரனாவும், ஒரு மாபெரும் தீர்க்கதரிசியாகவும் இருந்தார் ( எண்ணாகமம் 12:3; உபாகமம் 34:10 ). ஒரு தலைவன் என்கிற நிலையில் யோசுவா வெற்றி பெற வேண்டும் என்றால் மோசேயின் மாதிரியைப் பின்பற்ற வேண்டியதாயிருந்தது, இதை யோசுவா அசத்தலாகச் செய்தார். இவருடைய பெயரைத் தாங்கி வரும் புத்தகத்தின் கடைசி அதிகாரத்தில் இவர் கர்த்தருடைய ஊழியக்காரன் என்னும் பெயரைப் பெற்றார் (யோசுவா 24:29 ). நாம் கிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றினால் ( பேதுரு 2:21 ) இவ்வுலகில் வெற்றியுள்ள வாழ்க்கையை நமதாக்கிக் கொள்ள முடியும். இன்றைய நாட்களில் பல வாலிபர்கள் திரைப்பட நட்சத்திரங்களை, விளையாட்டு வீரர்களை, அரசியல் தலைவர்களை தங்கள் மாதிரிகளாகக் கொண்டு அவர்களைப் போல் பேசவும், நடக்கவும் முயற்சிக்கின்றனர். ஆனால், அந்த பிரபலங்கள் இந்த வாலிபர்களின் நலனுக்காக ஏதாவது செய்கிறார்களா? இல்லை. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நம் ஒவ்வொருவருக்காகப் பாடுகள் பட்டார். இரத்தம் சிந்தி தம் ஜீவனையே விட்டார். நமக்காக தம் ஜீவனை விட்டவருக்காக நாம் நம் ஜீவனைக் கொடுக்க வேண்டாமா? கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக் கடவது என்று ( பிலி. 2:5 ) -ல் நாம் வாசிக்கிறோம். இன்று உலகில் நடக்கும் எல்லா சண்டைகளுக்கும், யுத்தங்களுக்கும் காரணம் ஒவ்வொருவரிடத்திலும்

கிறிஸ்துவின் சிந்தையில்லாதது தான்.

### III. யோசுவா சூழ்நிலைகளைப் பொருட்படுத்தாமல், தேவனிடத்தில் நம்பிக்கை உடையவராக இருந்தார்:

யோசுவா மிகப் பெரிய பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டியதாய் இருந்தது. மோசே செய்து முடிக்க வேண்டிய பணி இவரிடம் ஒப்பு விக்கப்பட்டிருந்தது. அந்த மிகப் பெரிய சாதனையை எப்படி யோசுவாவால் நிகழ்த்த முடிந்தது? அவர் தேவனிடத்தில் முழுமையான நம்பிக் கை வைத்து அந்த பொறுப்பை தேவனிடமே விட்டு விட்டார். நாமும் கூட தேவகாரி யங்களில் ஈடுபடும் போது சூழ்நிலை கள் நமக்கெதிராக மாறினால் நாம் துவண்டு விடாமல் தேவனை உறுதியாய்ப் பற்றிக் கொண்டால் வெற்றி நம் வசப்படும். தேவன் எவைகளையெல்லாம் நாம் செய்யும் படி கட்டளையிட்டிருக்கிறாரோ அவைகளெல்லாம் செய்ய முடியாத வைகளல்ல ( பிலிப்பியர் 4:13 ). தேவன் நம் பட்சத்தில் இருக்கிறார் ( ரோமர் 8:31 ). எந்தத் துறையிலும் வெற்றி என்பது தைரியத்துடன் ஆரம்பமாகிறது. புதிய எண்ணங் களை முயற்சிக்க, புதிய திட்டங்களை செயல்படுத்த தைரியம் அவசிய மாகிறது. யோசுவாவுக்கு முன்பாக இமாலயப் பணி வைக்கப்பட்டிருந்தது ( யோசுவா 1:2-6 ). அவர் தேவனு டைய சத்துருக்களை முறியடித்து நியாயப்பிரமாணத்தின் படியெல்லாம் செய்யப் பணிக்கப்பட்டிருந்தார். தேவனுக்காக நிற்பதற்குத் தைரியம் தேவை. இந்தத் தைரியம் யோசுவா வுக்கு தேவன், நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை என்று சொன்ன வார்த்தைகளாலே உண்டானது ( யோசுவா 1:7 ). ஆதலால், நாம் தேவனுக்காகத் தைரியமாக எழும்பி பிரகாசிக்க முடியும்.

பிரியமான வாலிபக் கண்மணிகளே! யோசுவாவைத் தேவன் வல்லமையாக எடுத்துப் பயன்படுத்தி அந்த இஸ்ரவேல் ஜனங்களை கானான் தேசத்திற்குள் வழி நடத்த வைத்ததற்கு தேவன் அவரிடம் கண்ட சில பண்புகளை நாம் பார்த்தோம். யோசுவா தன் வாலிப வயதில் தேவனைத் தேடினதாலும், தன்னுடைய முன்னோடியாகத் திகழ்ந்த தேவதாசனாகிய மோசேயை தன் மாதிரியாகக் கொண்டு மோசேயின் பிரமாணத்தை விட்டு வலது இடது புறம் விலகாதிருந்ததினாலும், சூழ்நிலைகளைப் பொருட்படுத்தாமல் தேவனிடத்தில் நம்பிக்கை உடையவராக இருந்தபடியால் சத்துருக்களை முறியடித்து மிகப்பெரிய வெற்றி பெற்றார். நாமும் சரீரப்பிரகாரமான வாழ்க்கையில் வெற்றி பெறவும், ஆவிக்குரிய வாழ்வில் வெற்றி பெறவும் தேவதாசனாகிய யோசுவாவின் பண்புகளைப் பெற்றுக்கொள்வோம். அப்பண்புகளை நம்முடையதாக்கிக் கொண்டால் வெற்றி நிச்சயம் நம் வசமாகும்.

சிறுவர் பகுதி

# நேபுகாத்நேச்சாரிடமிருந்து ...

*RAR Nayagam*

பிள்ளைகளே! அனைவரும் நலமாக இருக்கிறீர்களா? உங்களுடைய புதிய பள்ளியாண்டு எப்படி இருக்கிறது? அனைத்தும் தேவனுடைய கிருபையால் நலமாக இருக்கிறதென்று விசுவாசிக்கிறேன்.

இதே மாதம் நாம், பாபிலோனின் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரிடம் இருந்து ஒரு முக்கியமான பாடத்தை கற்றுக்கொள்ளப் போகிறோம். (தானியேல் 4:30 ) -ல் இது என் வல்லமையின் பராக்கிரமத்தினால், என் மகிமை பிரதாபத்துக்கென்று, ராஜியத்துக்கு அரண்மனையாக நான் கட்டின மகா பாபிலோன் அல்லவா என்று சொன்னான்.

இந்த வசனங்களை நன்றாகப் படியுங்கள். இங்கே என் வல்லமை, என் மகிமை, நான் கட்டின மகா பாபிலோன் என்று இந்த ராஜா தன்னை மிகவும் பெரிதாக நினைத்து பெருமைப்பட்டுக் கொண்டிருந்தான். தனக்கு இருக்கும் அதிகாரம், வல்லமை அனைத்தும் தன்னாலே அவனுக்கு கிடைத்தது என்று நினைத்திருந்தான்.

அந்த பெருமைக்கும், மனமேட்டிமைக்கும் அவனுக்கு என்ன தண்டனை கிடைத்தது தெரியுமா? அந்த ராஜா மனிதரிடமிருந்து தள்ளப்பட்டு, மாடாக மாறிப்போய் மாட்டைப் போல் புல்லை தின்றான். ஆம், அவன் மிருகமாக மாற்றப்பட்டான். அதற்கு காரணம் அவன் பெருமை / மனமேட்டிமை. நீதி 16:18 -ல் அழிவுக்கு முன்னானது அகந்தை விழுதலுக்கு முன்னானது மனமேட்டிமை என்று வாசிக்கிறோம். ஆம், பிள்ளைகளே, தேவன் பெருமையுள்ளவர்களை எதிர்த்து நிற்கிறார். (யாக 4:6)

சரி, ராஜா நேபுகாத்நேச்சாரின் நிலைமை என்ன ஆனது என்று ஆர்வமா கேள்வி உங்களுக்குத் தோன்றும். அப்படித்தானே? தொடர்ந்து வாசித்தால் தானி. 4:34- ல் அவருடைய ராஜ்யமே தலைமுறை தலைமுறையாக நிற்கும் என்று தன்னை தாழ்த்தி மெய் தேவனை உயர்த்தினான். பின் மீண்டும் அவன் மனிதனாக மாறினான்.

நேபுகாத்நேச்சாரிடமிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடம் என்ன? ஆம், பெருமையுடனும், மனமேட்டிமையோடும் நாம் இருக்கக்கூடாது. என்னாலே எல்லாம் ஆகும் என்று சொல்லக்கூடாது. மாறாக, தேவனுடைய துணையோடு நாம் காரியங்களைச் செய்யவேண்டும். யாக் 4:6 - ல் வசனம் தாழ்மையுள்ளவர்களுக்கு தேவன் கிருபை அளிக்கிறார் என்று கூறுகிறது. எனவே, என் அன்பு பிள்ளைகளே! தாழ்மையோடு இருங்கள். அது ஆசீர்வாதங்களை தரும் சரியா?.

மருத்துவ ஆலோசனை

# வயிற்றுப் புண் Gastric / Peptic Ulcer

## வயிற்றுப் புண் வருவதற்கு காரணங்கள் என்ன ?

வயிற்றுப் புண்ணுக்கு இது தான் காரணம் என்று ஒரு விஷயத்தை மட்டும் குறிப்பிட்டுச் சொல்ல இயலாது. நாம் உண்ணும் உணவு ஜீரணம் ஆக இரைப்பையில் இரைப்பை அமிலம் ( Gastric Acid ) சுரக்கிறது. அதேசமயத்தில், அந்த அமிலம் இரைப்பையின் உட்புறத்தை அரிக்காமல் இருக்க ஒரு பூச்சு இருக்கிறது. இதனால் அமிலம் உணவின் மீது மட்டும் செயல்படும். ஒருவேளை தேவைக்கு அதிகமாக அமிலம் சுரந்தாலோ அல்லது பூச்சின் தன்மை குறைந்து போனாலோ இரைப்பையின் உட்புறம் பாதிக்கப்பட்டு, அதில் அரிப்பு ஏற்பட்டு வயிற்றுப் புண் வருகிறது. இதற்கு காரணிகள் பல உண்டு.

### வயிற்றுப் புண்ணின் அறிகுறிகள் ?

- வயிற்றின் மையப் பகுதியில் வலி
- உணவிற்கு பின் / முன் வலி. தூங்கும் நேரத்தில் வலி
- நெஞ்செரிச்சல், வாந்தி என்று பல வகைகளில் இருக்கும்.

### தவிர்க்க வேண்டியவை

- வயிற்றுப் புண்ணின் வைத்தியத்திற்கு பெரிதும் பங்களிப்பது தவிர்க்கப் பட வேண்டிய காரியங்கள் தான்.
- வேளாவேளைக்கு உணவு சாப்பிடாமல் இருத்தல்
- மூட்டு வலி, கைகால் வலிக்காக உட்கொள்ளும் தவறான மருந்துகள்
- குடி பழக்கம் மற்றும் புகைப்பழக்கம்

### செய்யபடவேண்டியவை

- வயிற்றுப்புண் ஒரு கிருமியின் காரணமாக கூட வர வாய்ப்புள்ளதால் மருத்துவரிடம் சென்று தக்க சிகிச்சை பெற வேண்டும்.
- வயிற்றுப்புண் கவனிக்கப்படாவிட்டால் வயிற்றுக்கு ஆபத்தான நிலை ஏற்படக் கூடிய சிக்கலான நிலை வந்துவிடும்.
- வயதானவர்கள், நீண்ட நாள் இந்த பிரச்சனை உள்ளவர்கள் Endoscopy ( எண்டோஸ்கோப்பி ) செய்து கொள்வது நல்லது. ஏனென்றால், இது புற்றுநோயாகக் கூட மாறும் வாய்ப்பு உள்ளது.
- இரைப்பையில் அமிலம் அதிகமாக சுரப்பதை தவிர்க்கும் மருந்துகளை பயன்படுத்த வேண்டும்.

Dr. Abel, CMC, Vellore.

# தேவபிள்ளையே! உன்னை வெளிப்படுத்து

சகோ. K.M. பிலிப்

II தீமோத்தேயு 1 7 –ல் தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும், அன்பும், தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார். என்று பவுலடியார் தீமோத்தேயுக்கு எழுதுகிறார். இதில் தேவன், நமக்கு... என்று அனுபவமும், முதிர்ச்சியும், தேவனால் மிகுந்த வல்லமையாய் எடுத்துப் பயன்படுத்திக் கொண்டிருக்கிற ஊழியருமாகிய பவுல், வாலிபனும் புதிய விசுவாசியுமாகிய தீமோத்தேயுவோடு தன்னை சமப்படுத்தி எழுதுகிறார். இதில் தேவன் பவுலுக்கு எந்த ஆவியைக் கொடுத்தாரோ, அதே பலமும் அன்பும் தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே சாதாரண விசுவாசி தீமோத்தேயுவுக்கும் கொடுத்திருக்கிறார் என்கிற உண்மையை நாம் புரிந்து கொள்ள வேண்டும். தேவனுடைய பிள்ளைகளில் பாகுபாடின்றி எல்லோருக்குமே தேவன் ஒரே ஆவியைக் கொடுத்திருக்கிறார் ( எபே 1 : 13 ). இந்த உண்மையை பவுல் வெளிப்படுத்துவதற்கு சுமார் 900 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த இஸ்ரவேல் தேசத்து சிறு பெண் அல்லது இளம்பெண் இந்த ஆவியின் பலத்தால் மிகப் பெரிய ஆத்தும ஆதாயப் பணியை செய்திருக்கிறாள். இந்த வரலாற்றை உற்று கவனித்து நமக்குள் மறைந்திருக்கும் தேவன் தந்த ஆவியானவரின் பலத்தை உணர்ந்து உற்சாகப்படுவோம்.

II. இராஜாக்கள் 5 :1 –17 பகுதியில் உள்ள சரித்திரப் பகுதியின் ஆரம்ப வசனங்கள் 1,2 ல், சீரிய ராஜாவின் படைத்தலைவனாகிய நாகமான்.... குஷ்டரோகியாயிருந்தான். சீரியாவிலிருந்து தண்டுகள் புறப்பட்டு, இஸ்ரவேல் தேசத்திலிருந்து ஒரு சிறு பெண்ணைச் சிறைபிடித்துக் கொண்டு வந்திருந்தார்கள். அவள் நாகமானனின் மனைவிக்கு பணிவிடை செய்து கொண்டிருந்தாள் என்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

அந்த நாட்களில் குஷ்டரோகம் யாராலும் சுகப்படுத்த முடியாத வியாதியாயிருந்தது. உடலின் ஒரு பகுதியில் சிறிதளவு உருவாகி நாளடைவில் உடல் முழுவதும் பரவும். பாதிக்கப்பட்ட பகுதி அழுகி துர்நாற்றம் வீசும். சில உறுப்புகள் அழுகி, இற்று விழுந்து, அருவறுப்பான தோற்றத்தை ஏற்படுத்தும், இதற்குக் கொடூரமான வேதனையோடு கூடிய மரணமே முடிவாகும். ( நம்முடைய பாவமும் – குஷ்டரோகத்தை போன்றதே என்பதை தயவுசெய்து புரிந்து கொள்வோம் ). இந்த நிலையில் தன் எதிர்காலத்தைக் எண்ணிப் பார்க்கும் மகாபராக்கிரமசாலி நாகமானின் உள்ளம் எவ்வளவாய் உடைந்து போயிருக்கும்? அவன் குடும்பம் எவ்வளவு பெரிய துக்கத்தில், கலக்கத்தில் மூழ்கியிருந்திருக்கும்? சமாதானமற்று, சந்தோசத்தை இழந்து, இருள்

சூழ்ந்திருந்த இந்த நிலைமையை, நாகமான் வீட்டில் அடிமைவேலை செய்யும் தேவஜனமான இஸ்ரவேல் தேசத்து சிறுபெண் உற்றுக் கவனிக்கிறாள். இந்த நாகமானால் தான் இவள் தன் பெற்றோரை, குடும்பத்தை, உறவுகளை, தேசத்தை, தன் சுதந்திரத்தையும் இழந்து பெரும் தீமையை, வேதனையை அனுபவித்துக் கொண்டிருக்கிறாள். ஆனாலும், நாகமானின் மேல் கோபமோ, எரிச்சலோ, பகையோ கொள்ளாமல், அவன் நிலை குறித்து மனதிற்குள் சந்தோசப்படாமல் அவனுக்காக தன் உள்ளத்தில் இரக்கப்படுகிறாள். அவன் வீட்டில் ஏற்பட்டிருக்கும் மாபெரும் துக்கம் குறித்து இவள் துக்கப்படுகிறாள். தேவன் தனக்குத்தந்த ஆவியின் பெலத்தால் அவனிடத்தில் அன்பு கூர்ந்தாள். அந்த அன்பின் வெளிப்பாட்டால் நாகமானின் மனைவியினிடத்தில் என் ஆண்டவன் சமாரியாவிலிருக்கிற தீர்க்கதரிசியினிடத்தில் போவாரேயானால் நலமாயிருக்கும். அவர் இவருடைய குஷ்டரோகத்தை நீக்கிவிடுவார் (5:3) என்ற நற்செய்தியை அறிவித்தாள்.

## I. இந்த நற்செய்தியை அறிவித்ததின் மூலம்தான் தேவனுடைய பிள்ளை என்பதை வெளிப்படுத்தினாள்.

ஆம், குஷ்டரோகி நாகமான் எல்லா வகையிலும் தனக்குத் தீமையே செய்திருந்தபோதிலும், இவள் அவனுக்கு குஷ்டம் நீங்கும்படியான நல்ல செய்தியை சொன்னதின் மூலம், ஒருவனுக்கும் தீமைக்குத்தீமை செய்யாதிருங்கள் ( ரோ. 12:17 ) உங்கள் சத்துருக்களை சிநேகியுங்கள் ; உங்களை சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும், உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபியுங்கள். இப்படிச் செய்வதினால் நீங்கள் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவுக்கு புத்திரராயிருப்பீர்கள்... ( மத் 5:44,45 ) என்ற தேவபிள்ளைகளுக்கே உரிய உன்னதப் பண்பால் உயர்ந்து வாழ்க்கையின் இருளை அகற்றியது. அன்பானவர்களே! நாமும் உலகத்திற்கு வெளிச்சமாயிருந்து அநேகரை பாவ இருளிலிருந்து மீட்டெடுப்போம்.

## II. இவள் இந்த நற்செய்தியை அறிவித்ததின் மூலம் தன் விசுவாசத்தை அறிக்கையிட்டாள்.

இந்த இளம் வாலிபப்பெண் தன் பெற்றோரைவிட்டு, உறவுகளை விட்டு, தன் தேசத்தைவிட்டுப் பிரிந்திருந்த போதும் **தன் தேவனை விட்டுப் பிரியவில்லை.** தேவன் மீது வைத்திருந்த தன் விசுவாசத்தைவிட்டு விலகவில்லை. அதில் தெளிந்த புத்தியுள்ளவளாயிருந்தாள். தான் சொல்லிய நற்செய்தியை நிச்சயம் பலமுறை வலியுறுத்திச் சொல்லியிருப்பாள். தேவன் தனக்குக் கொடுத்த ஆவியின் பெலத்தினால் தன் விசுவாசத்தை தைரியமாய் அறிக்கையிட்டாள். தான் யாரிடம் பேசுகிறோம்? ( படைத்தளபதியிடம் ), எதைக் குறித்துப் பேசுகிறோம்? (யாராலும் குணப்படுத்த முடியாத குஷ்டம் பற்றி ) எதைப்பற்றி பேசுகிறோம் ? ( தேவனின் வல்லமை பற்றி ) என்பதில் தெளிவாயிருந்தாள்.

தேவனும் அவள் விசுவாசத்தைக் குணப்படுத்தி நாகமானுக்கு சுகமளித்தார். ஆம், முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக அறிக்கை பண்ணுவேன் ( மத் 10:32 ) அவரிடத்தில் விசுவாசமாயிருப்பவன் எவனோ அவன் வெட்கப்பட்டுப் போவதில்லை என்று எழுதியிருக்கிறபடி ஆயிற்று ( ரோ 9:33 ) நாமும் நம் விசுவாசத்தை தைரியமாய் அறிக்கையிட்டு அநேகரை பாவக்கட்டிலிருந்து விடுவிப்போம்.

III. இவள் இந்த நற்செய்தியை அறிவித்ததின் மூலம் மிகப்பெரிய ஆத்தும அறுவடை செய்தாள்.

இச்சிறுமியின் நற்செய்தியைக் கேட்டு நாகமான் சமாரியாவிலிருந்த தேவனுடைய தீர்க்கதரிசி எலிசாவிடம் சென்றான். தேவமனிதன் எலிசாவின் வார்த்தையின்படி யோர்தான் நதியில் ஏழுமுறை முழுகி எழுந்தான். அவன் மாம்சம் ஒரு சிறுபிள்ளையின் மாம்சத்தைப் போல மாறி புதியமனிதனாக மாறினான். சரீரத்தில் மட்டுமல்ல, ஆத்துமாவிலும் புதியமனிதனான். இச்சிறுமியின் விசுவாச அறிக்கை நாகமானின் விசுவாச அறிக்கைக்கு வித்திட்டது. அவன் எலிசாவுக்கு முன் நின்று இதோ இஸ்ரவேலில் இருக்கிற தேவனைத் தவிர பூமியெங்கும் வேறே தேவன் இல்லை என்பதை அறிந்தேன். (II ராஜா 5:15) என்று தன் இருதயத்தின் ஆழத்திலிருந்து அறிக்கையிட்டான். அடிமை சிறுமி நற்செய்தி அறிவித்ததால் நாகமானும் அவன் குடும்பமும் தேவனுக்கு அடிமைகளானார்கள்... உமது அடியேன் இனிக் கர்த்தருக்கே அல்லாமல், அந்நிய தேவர்களுக்குச் சர்வாங்கதகனத்தையும், பலியையும் செலுத்துவதில்லை, என்று (5:17) தன் மனமாற்றத்தை பகிரங்கப்படுத்தினான். இங்கு மிகப்பெரிய ஆத்தும அறுவடை நடந்தது.

அன்பான தேவ ஜனமே! நம் தேவன் நம் எல்லோருக்குமே பலமும், அன்பும், தெளிந்த புத்தியுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார். ஓர் அடிமைப்பெண், இளம்வாலிபப் பெண் தனிமையில் நின்று இவ்வளவு பெரிய சாதனையை தேவ ஆவியால் செய்யமுடியுமென்றால், நாம் சாதிப்பது எவ்வளவு எளிது. எழுந்து நிற்போம்! நம்மை வெளிப்படுத்துவோம்! ஆத்துமாக்களை ஆதாயப்படுத்தி ஞானவான்களாய் திகழ்வோம். (நீதி. 11:30)!

இச்சரித்திரத்தில் புறஜாதியும், விக்கிரக ஆராதனைக்காரனுமான நாகமான், இஸ்ரவேலின் தேவனை ஆராதிக்கும்படி தன் இருதயத்தை ஒப்புக் கொடுத்த, இத்தகு பெரிய மாற்றம் இச்சிறுபெண் நற்செய்தியை வாயால் சொன்னதால் மட்டும் நடந்திருக்க சாத்தியமே இல்லை. காரணத்தை ஆராய்ந்தால் நாம் பின்பற்ற வேண்டிய மிகப்பெரிய ஓர் உண்மை நமக்கு வெளிப்படும். இச்சிறுபெண் நாகமானின் குஷ்டம் நீங்கும்படியான ஆலோசனையை (நற்செய்தியை) சொல்லுகிறாள். நாகமான் கேட்டு செயல்படுகிறான். ராஜாவும் உடன்படுகிறார். இந்த நடைமுறை அவ்வளவு எளிதானதா? பொதுவாக எந்த

ஒரு ஆலோசனையும், சொல்பவரது தகுதி, சொல்லப்படும் ஆலோசனையின் உண்மைத்தன்மையைப் பொறுத்தே ஏற்றுக் கொள்ளப்படும். இங்கே ஆலோசனை சொல்பவள் அடிமை, வேலைக்காரி, அனுபவசாலி என்று ஏற்க முடியாத சிறுபெண். சொல்லும் ஆலோசனையோ, நம்புவதற்கு சிறிதும் சாத்தியமில்லாத ஒன்று. ஆலோசனை கேட்பவனோ நாட்டில் எல்லோராலும் மதிக்கத்தக்க பெரிய பதவியிலிருப்பவன். இச்சிறு அடிமைப் பெண்ணின் பேச்சைக்கேட்டு நடைமுறைக்குச் சாத்தியம் இல்லாத இக்காரியத்தில் ஈடுபட்டு, ஒருவேளை தோல்வி ஏற்பட்டால் அப்பெரிய மனிதனுக்கு எவ்வளவு பெரிய அவமானம்? ஆனால், நாகமானோ இச்சிறுபெண்ணின் ஆலோசனையை ஏற்று, பகிரங்கமாய் அதை இராஜாவுக்கு அறிவித்து, தன் குதிரை, ரதம், வேலைக்காரர்களோடு நாடுவிட்டு நாடு வருகிறானென்றால் அவன் இப்பெண்ணின் வார்த்தைகளின் மீது எவ்வளவு பெரிய நம்பிக்கை வைத்திருப்பான் என்று யோசித்துப்பாருங்கள்.

இங்குதான் இச்சிறு பெண் இஸ்ரவேலின் தேவனின் பிள்ளையாக நிமிர்ந்து நிற்கிறாள். அவளுடைய வாயின் வார்த்தைகளுக்கு முன், அவள் வாழ்ந்த வாழ்க்கை நிற்கிறது. அவள் அடிமையாயிருந்தாலும், நாகமான் வீட்டில் அவள் வாழ்ந்த தேவ பண்பு மிக்க பலமும், அன்பும், தெளிந்த புத்தியுமுள்ள சீரிய வாழ்க்கை சீரிய தேசத்து படைத்தளபதியின் கண்களுக்கு முன் உயர்ந்து நின்றிருக்கும். அவள் யார் என்பதையும், அவள் ஆராதிக்கும் தேவன் எப்படிப்பட்டவர் என்பதையும் வெளிப்படுத்தியிருக்கும். மனுஷர் உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது. ( மத் 5:16 ) என்ற வார்த்தையின் வெளிப்பாடாக வாழ்ந்திருப்பாள். அந்த வாழ்க்கையே நாகமானின் விசுவாசத்திற்கும், சுகத்திற்கும், மனமாற்றத்திற்கும் காரணமாயிருந்திருக்கும் என்பதே நாம் கற்று பின்பற்ற வேண்டிய உண்மையாகும். ஆம்! கிறிஸ்தவம் போதிப்பதோடு கூடிய வாழ்க்கையில்தான் சாதிக்க முடியும். இவர்கள் கிறிஸ்தவர்கள் ( அப் 11:26 ). இவர்கள் இயேசுவுடனே கூட இருந்தவர்கள் (அப் 4:13). என்றும் மற்றவர்களால் அடையாளப்படுத்தக் கூடிய வாழ்க்கையே மிகச்சிறந்த போதனையாகும்.

அன்பானவர்களே! தேவனுடைய பிள்ளைகள் தேவன் மீது தனக்குள்ள விசுவாசத்தை வெளிப்படுத்த வேண்டிய சூழ்நிலைகளில் தைரியமாய் வெளிப்படுத்த வேண்டும்; அதன் மூலம் மற்றவர்களிடத்தில் மிகப்பெரிய ஆவிக்குரிய தாக்கத்தை ஏற்படுத்த முடியும் என்பதை இப்பெண் மூலம் கற்றிருப்பீர்கள் என்று விசுவாசிக்கிறேன். நான் விசுவாசிக்கிறவர் இன்னாரென்று அறிவேன். ( II தீமோ 1:12 ) என்பதை வாழ்க்கை மூலம் வெளிப்படுத்துங்கள். விசுவாசத்தோடு தைரியமாய் செயல்படுங்கள். ஆத்துமாக்களை தேவனுக்கென்று ஆதாயப்படுத்துங்கள். உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் இயேசு உங்களுடனே கூட இருப்பாராக. ஆமென்.

# தேவனைப் படைத்தது யார்?

Bro. P.R. Samy

தேவன் தம்மைப்பற்றி வெளிப்படுத்தி இருக்கிறார். மனிதன் தேவனை அறிந்துகொள்ளக்கூடும். தேவனுடைய தெய்வீக தன்மையையும், அவருடைய வல்லமையையும் அறிந்து கொள்வது, மனிதனுடைய அறிவின் எல்லைக்குள் இருக்கிறது. ஆதலால் போக்குச் சொல்ல இடமில்லை என்று வேதம் சொல்லுகிறது.

இந்த நிகழ்ச்சியைக் கேட்டுக்கொண்டிருக்கும் நீங்கள் ஒவ்வொருவரும், தேவன் ஒருவர் இருக்கிறார் என்று விசுவாசிப்பவர்கள் என்று எண்ணுகின்றேன். தேவன் இல்லை என்று கூறுவோரும், தேவனைப்பற்றிய சரியான அறிவை உடையவர்களாக இல்லாததினால், தேவனை மறுப்பவர்களாக இருக்கின்றனர். ஆகவே தேவனை விசுவாசிக்கிறோம் என்று கூறும் நாமும் தேவனைப்பற்றிய தெள்ளறிவு உடையவர்களாக இருக்கவேண்டும் என்பதே எங்கள் ஜெபமாகும்.

தேவன் இருக்கிறார் என்பதைக்குறித்து அண்ட படைப்பு கோட்பாட்டின் ஆதாரத்தைக்கொண்டு விவாதம் பண்ணுவது சுலபம். விஞ்ஞானம் வளர வளர, தேவனைப்பற்றியும், ஜடப்பொருளைப்பற்றியும் ( MATTER), இல்லைவாதிகள் கொண்டிருக்கும் கருத்தும் மாறி வருகிறது. இப்படிப்பட்ட வாதங்களினூடே எழும்பும் சிலகேள்விகள், தேவனைப்படைத்தது யார்? தேவன் நித்தியமானவரா? அல்லது ஜடப்பொருள் நித்தியமானதா? என்பவைகள்.

விஞ்ஞான அடிப்படையில் ஜடப்பொருள் நித்தியமாக இருக்க முடியாது என்பதை நிரூபிக்க முடியும். சிருஷ்டி கர்த்தாவாகிய தேவன் என்றென்றும் வாழ்பவர். நித்தியமாக இருப்பவர். இந்த உண்மையை புரிந்து கொள்வது பலருக்கு பிரச்சனையாக இருப்பதற்கு காரணம், அப்படிப்பட்டவர்கள் தேவனைப்பற்றி கொண்டிருக்கும் தவறான எண்ணங்கள் தான். உதாரணமாக, தேவன் சரீரப் பிரகாரமாக ஒரு மனிதனைப்போல இருப்பார் என்று எண்ணுகின்றனர். தேவனுடைய ஆரம்பத்தை அறியவேண்டியது நியாயம் என்று வாதிட்டாலும், அப்படிப்பட்ட எண்ணம் பொது அறிவிற்கும் வேதாகமத்திற்கும் அப்பாற்பட்டது. காரணம், வேதாகமத்தில் தேவனைப்பற்றி கூறப்பட்டிருப்பதை. கேளுங்கள், தேவன் ஆவியாயிருக்கிறார், மாம்சமும், ரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை. பரலோகத்திலிருக்கிற என் பிதா இதை உனக்கு வெளிப்படுத்தினார். பொய் சொல்ல தேவன் ஒரு மனிதன் அல்ல. மனம் மாற அவர் ஒரு மனுப்புத்திரனும் அல்ல.

தேவனைப் பற்றிய இந்த விளக்கங்கள், அவர் ஒரு ஆவிக்குரியவர் என்று கூறுகிறது. நாம் வாழும் இந்த சரீரப்பிரகாரமான நீளம், அகலம், உயரமுடைய

**உலகத்திற்கு அப்பால் இருக்கிறார். இந்த உண்மையை வேதாகமம் மேலும் தெளிவாக கூறுவதைக் காணலாம்.** நான் சமீபத்திற்கு மாத்திரமா தேவன்? தூரத்திற்கும் தேவன் அல்லவோ **என்று கர்த்தர் சொல்லுகிறார். வானங்களும், வானாதி வானங்களும் அவரைக் கொள்ளக்கூடாதிருக்க அவருக்கு ஒரு ஆலயத்தைக்கட்ட வல்லவன் யார்? அவருக்குள் நாம் பிழைக்கிறோம், அசைகிறோம், இருக்கிறோம். அவருக்கு வானமே சிங்காசனம். பூமியே பாதபடி. தேவன் இடத்திற்கு அப்பாற்பட்டவர் மாத்திரம் அல்ல. காலத்தாலும் கட்டுப்படுத்தப்படுகிறவர் அல்ல என்பதை விளக்கும் வசனங்களை கேளுங்கள்.**

ஒரு நாள் ஆயிரம் வருஷம் போலவும், ஆயிரம் வருஷம் ஒரு நாள் போலவும் இருக்கிறது என்பதை அறியாதிருக்க வேண்டாம். உமது பார்வைக்கு ஆயிரம் வருடம் நேற்று கழிந்த நாள் போலவும் இராச்சாமம் போலவும் இருக்கிறது. நீரோ மாறாதவராயிருக்கிறீர். உமது ஆண்டுகள் முடிந்து போவதில்லை. **கிறிஸ்து சீஷர்களிடத்தில் பேசுகிற போது,** பிதாவானவர் தம்முடைய ஆதீனத்திலே வைத்திருக்கிற காலங்களையும், வேளைகளையும் அறிகிறது உங்களுக்கு அடுத்ததல்ல **என்றார்.**

**இதிலிருந்து நாம் என்ன முடிவுக்கு வருவோம்? தேவன் இவ்வாறு காலத்தினாலும், இடத்தினாலும் கட்டுப்படுத்தப்படாதவறாக இருக்கிறார் என்பது உண்மையானால் அந்த தேவனை படைத்தது யார் என்கிற கேள்விக்கு அவசியம் இல்லை. ஒரு மாணவனைப்பார்த்து 4 கோணங்களுள்ள முக்கோணத்தை வரை என்றால் எப்படி இருக்கும்! அதைப்போலத் தான் தேவனைப் படைத்தது யார் என்கிற குதர்க்கமான கேள்வியும். அப்படி கேட்பதிலேயே அவர்தான் படைத்தார் என்ற முடிவுக்கு வருகிறோம். தேவன் தாமே காலத்தையும் இடத்தையும் படைத்தவரென்றால், அவர் படைக்கப்பட்டிருக்க முடியாது அவரே** ஆதி **என்பதை துவக்கியவர். ஆகவே தான் அவர்,** நான் அல்பாவும் ஒமேகாவும், ஆதியும் அந்தமுமாயிருக்கிறேன் **என்றார். அதாவது காலத்தை துவக்கியவர் அவரே, முடிப்பவரும் அவரே. காலம் முடிவடையும் பொழுது மனுக்குலம் யாவும் எல்லா** ஜடப்பொருளும் **நித்தியத்துக்குள் பிரவேசிக்கும். கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக்குறித்து பேசும்பொழுது, வேதம் குறிப்பிடுவது,** கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிற விதமாய் வரும். அப்பொழுது வானங்கள் மடமடவென்று அகன்றுபோம். பூதங்கள் வெந்து உருகிப்போம். பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம். இப்படி இவைகளெல்லாம் அழிந்து போகிறதாயிருக்கிறபடியால் நீங்கள் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும் தேவபக்தியும் உள்ளவர்களாயிருக்க வேண்டும்?. மேலும் தேவன் அவர்களுடைய கண்ணீர் யாவையும் துடைப்பார். இனி மரணமுமில்லை. துக்கமுமில்லை. அலறுதலுமில்லை. வருத்தமுமில்லை. முந்தினவைகள் ஒழிந்து போயின.

தேவன் தன்னிகரில்லாதவர், தனித்தன்மை வாய்ந்தவர். தம் விருப்பப்படி ஆளுகிறவர். தொடர்பற்றவர். தேவனைப்பற்றிய முழு விளக்கம் கொடுக்க இயலாது. தேவன் ஆவியாயிருக்கிறார், ஒளியாயிருக்கிறார், தேவன் அன்பாகவே இருக்கிறார் என்று வேதம் கூறுகிறது. கர்த்தர் மோசேக்கு முன்பாக கடந்து போகிறபோது, நான் கர்த்தர், கர்த்தர், கர்த்தர். இரக்கமும், கிருபையும், நீடிய சாந்தமும், மகாதயையும், சத்தியமுள்ள தேவன் என்றார்.

இந்த வார்த்தைகள் தேவனைப்பற்றிய விளக்கம் அல்ல. வர்ணனை என்றே குறிப்பிடலாம். விளக்கம் சிறிதானால் முழுமை இருக்காது. முழுமை இருந்தால் விளக்கம் அதிக நீளமாக இருக்கும் என்று ஒரு ஆசிரியர் கூறுகின்றார். பல இறையியல் மேதைகள் பல விளக்கங்களை கூறி உள்ளனர். சில நீண்ட விளக்கங்கள், சில குறுகிய விளக்கங்கள். குறிப்பாக பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஒரு இறையியல் மேதை அருமையான விளக்கத்தை தந்துள்ளார். தேவன் ஆவியானவர். நிகரே இல்லாத நித்தியமானவர். மாறாதவர் அவருக்குள் ஞானம், வல்லமை, பரிசுத்தம், நீதி, தயை, சத்தியம் உண்டு என்று கூறினார்.

இதிலிருந்து நாம் என்ன தெரிந்து கொள்ளுகிறோம் என்றால், தேவன் ஒருநபர். வெறும் சக்தியோ, ஒரு விசையோ, வல்லமையோ அல்ல. அவர் தாமே எல்லாவற்றுக்கும் மூலமும், முடிவுமாக இருக்கிறவர். அவர் நித்தியமானவர். எல்லாவற்றையும் கடந்தவர்.

பரிணாமவாத தத்துவப்படி சூரியனிலிருந்து ஒரு பகுதி மிகவும் சிறியதாகப் பெயர்ந்து வந்து காலத்தினால் குளிர்ந்து, அது பூமியாக மாறியது என்றும் சிலர் கூறுகிறார்கள். வேறு பலர் உலகமும் அதில் சர்வமும் கண்ணுக்குத் தெரியாத ஓரணுவின்மூலமாகத் தோன்றியது என்று கூறுகிறார்கள். மேலும் அந்த அணுவானது கோடான கோடி யுகங்களாக ஒன்று இரண்டாகி இரண்டு நான்காகி, எட்டாகி, பதினாறாகி, முப்பத்திரண்டாகி இப்படி ஒன்றிலிருந்து மற்றொன்று உற்பத்தியாயின என்று கூறுகிறார்கள். இவ்விதமாக உலகமும், அதிலுள்ள ஜீவ ராசிகளும் தோன்றின என்பது அவர்களுடைய வாதம்.

இவர்களைப்பார்த்து பூமி எங்கிருந்து வந்தது என்று கேட்டால், சூரியனிடத்தில் என்று பதிலளிப்பர். சூரியன் எங்கிருந்து வந்தது என்று தொடர்ந்து கேட்டு கொண்டே போனால், ஒன்றுமில்லாததிலிருந்து ஒன்று வந்தது என்பதை இல்லைவாதிகள் ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும். ஒன்றுமே இல்லாத காலத்தில் யாரோ ஒருவர் நித்தியமாக இருந்தார். அவர் தான் தேவன்.

அவர் எங்கிருந்து வந்தார்? அவர் எங்கிருந்தும் வரவில்லை. நித்தியமாக இருக்கின்றவர். பூமியை எடுத்துக்கொண்டால், அதில் ஒழுங்கு உண்டு,

அமைப்பு உண்டு. எல்லாம் கடிகார மணிப்படி ஒரு ஒழுங்குடன் செயல்பட்டு வருகிறது. ஆகவே தான் மனிதன் சந்திரனில் குறிப்பிட்ட இடத்தை குறிப்பிட்ட நேரத்தில் அடைய முடிகிறது.

மனித உடலை எடுத்துக்கொண்டால் அதில் ஒரு ஒழுங்கான அமைப்பு உண்டு. ஆகவே தான் சில உணவுகளை, மருந்துகளை, சிகிச்சைகளை உடல் ஏற்றுக்கொள்ள முடிகிறது. இவை எல்லாம் திடீர் விளைவா? அல்லவே. ஒருகைக் கடிகாரத்தை எடுத்துக்கொள்வோம். அதில் அமைப்பு உண்டு. ஆகவே அமைப்பாளர் ஒருவர் இருக்கத்தான் வேண்டும் என்ற பகுத்தறிவு கொள்கையை யாரும் மறுக்கமுடியாது.

உண்டாக்கப்படுவதற்கு காரணம் ஒரு ஜடம் அல்ல. அறிவு, வல்லமை, மனம். இவை தேவனுக்குத்தான் உண்டு. ஜடத்திற்கு அல்ல. தேவன் இல்லை என்ற வாதத்தில், தேவன் இருக்கிறார் என்று ஆஸ்திகன் கூற்று பாதிக்கப்படுவதில்லை. மாறாக தேவனிடத்தில் விசுவாசம் வைத்து, அவரை பின்பற்றுவது ஒரு பாதுகாப்பான வழி, தேவன் மனிதனுடன் வேதாகமத்தின் மூலம் தொடர்பு கொள்கிறார். அதற்கு கீழ்படிந்தால் நித்திய மகிழ்ச்சி உண்டு.

தேவனிடத்தில் விசுவாசம் வைப்பது மனிதனை மேம்படுத்தும், உயர்வுபடுத்தும். மனிதன் எதை நேசிக்கிறானோ அதைப்போலவே இருப்பான். பரலோகத்தில் பத்து அழகான பெண்கள் இருப்பார்கள். அவர்களுடன் நானும் இன்பத்தை அனுபவிப்பேன் என்று நம்புகிறவன் இவ்வுலகத்தில் நல்லதொரு ஜீவியத்தை ஜீவிக்காமாட்டான். காம இச்சைக்கு தன்னை ஒப்புகொடுப்பான்.

இல்லைவாதி எவனும் பைபிளை எழுதவில்லை. ஆனால் பைபிள் எழுதப்படாமலிருந்தால் எவ்வளவு பெரிய பாக்கியத்தை இழந்து இருப்போம். கலை, இலக்கியம், குடும்பம் போன்ற துறையில் உலகம் உருப்படுவதற்கு பைபிள் உறுதுணையாக நிற்கிறது.

அன்புள்ள வாசக நண்பனே, நீ தேவனை விசுவாசிக்கிற பிள்ளையாக இருப்பதினால், என் உள்ளம் பூரிக்கிறேன். தேவனைப்பற்றிய உண்மைகளை அறிந்து கொண்டு, அவருக்கு சாட்சியாக ஜீவிக்க உனக்கு தேவனருள் புரிவாராக!

- ஒரு கிறிஸ்தவன், சிலுவையை இழுத்துக் கொண்டுப் போவதைவிட, அதை எடுத்துச் செல்வது எளிதாயிருக்கும்.
- வருங்காலத்திற்காகச் சேமிக்கும் மிகச் சிறந்த பொருள் உங்கள் ஆத்துமாதான்.

# ஐசுவரியவான் பாதாள வேதனை அடைய காரணம் என்ன?

K. பாஸ்கர்

அன்பான வாசகர்கள் அனைவருக்கும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே வாழ்த்துக்கள் பல. கடந்த மாதம் ஐசுவரியவான் லாசரு உவமையில் தேவனை தேடாமல், கிறிஸ்துவின் சபையைத் தேடாமல் சொகுசாக வாழ்ந்த ஐசுவரியவான் பாதாள வேதனைக்குள் சென்றதை படித்தோம். அதன் தொடர்ச்சியாக இம்மாதத்தில் ஐசுவரியவான் பாதாள வேதனையை அவன் அடைய காரணம் என்ன என்பதை பார்ப்போம். உலகத்திலே ஐசுவரியவனாக வாழ்ந்ததால் பாதாள வேதனைக்குள் சென்றானா? அவன் தேவனை தேடாமல் கிறிஸ்துவின் சபையை தேடாததினால் பாதாள வேதனைக்குள் சென்றானா? அவன் இருந்த பொழுது இயேசு கிறிஸ்து சபையை ஸ்தாபிக்கவில்லை! ஐசுவரியம் அவனை பாதாளத்திற்குள் அழைத்துச் சென்றதா? இல்லை, அப்படியானால் பரதீசு என்ற ஆறுதலான இடத்திலிருக்கும் ஆபிரகாமும் ஒரு ஐசுவரியவான்! (ஆதி 13:2) பின் ஏன் ஐசுவரியவான் பாதாள வேதனை அடைந்தான்?

## I. அலட்சியமாக வாழ்ந்தான்

ஐசுவரியவான் வீட்டின் வாசலருகே நோயினால் கிடந்தான் லாசரு! ( லூக் 16:20 ) அதை அவன் பொருட்படுத்தாமல் ஐசுவரியவான் அலட்சியமாக வாழ்ந்தான் இன்றும் அநேகர் வசனத்தின்படி இயங்கும் கிறிஸ்துவின் சபையை அலட்சியமாகக் கருதுகின்றனர். ஐசுவரியவான் லாசருவை கண்டுக்காமல் இருந்தது போல, அநேகர் இன்றும் வேதம் சொல்லும் கிறிஸ்துவின் சபையை கண்டுக்காமல் தங்கள் பாரம்பரிய சபையை நாடுகின்றனர். ஐசுவரியவான் தனக்கிருந்த பணத்தை லாசருவின் பசியை, நோயைத் தீர்க்க பயன் படுத்தியிருக்கலாம் அல்லது ஐசுவரியவான் ஆத்துமாவை இரட்சிக்க பயன்படுத்தியிருக்கலாம்! தன் ஆத்துமாவைக் குறித்துக் கவலைப்படாமல் அலட்சியமாக வாழ்ந்தான்; இன்றும் அநேகர் தங்களிடம் உள்ள பணத்தை ஆத்தும இரட்சிப்புக்கு பயன்படுத்தாமல் வாழ்கின்றனர். லாசரு போன்ற மக்கள் குறித்து வேதம் நான் சிறியவனும் அசட்டை பண்ணப்பட்டவனுமாயிருக்கிறேன். ஆனாலும், உமது கட்டளைகளை மறவேன். ( சங்கீதம் 119:141 ) அதே சமயம் ஐசுவரியவான் போன்ற மக்களைக்குறித்து வேதம் அசட்டைக்காரரே, பாருங்கள் பிரமித்து அழிந்து போங்கள். ( அப்13:41 ) ஐசுவரியவான்களே, கேளுங்கள் உங்கள் மேல் வரும் நிர்பந்தகளினிமித்தம் அலறி அழுங்கள் உங்கள் ஐசுவரியம் அழிந்து உங்கள் வஸ்திரங்கள் பொட்டரித்துப் போயின உங்கள் பொன்னும், வெள்ளியும் துருப்பிடித்தது. அவைகளிலுள்ள துரு உங்களுக்கு விரோதமாகச் சாட்சியாயிருந்தது அக்கினியைப் போல உங்கள் மாமிசத்தைத்தின்னும்

கடைசி நாட்களில் பொக்கிஷத்தைச்சேர்த்தீர்கள் (யாக் 5:1-3) இந்தக் கடைசி நாட்களில் சுவிசேஷத்திற்குக் கீழ்படியாமல் அலட்சியமாக அநேகர் வாழ்கின்றனர். ஐசுவரியவான் அலட்சியமாக வாழ்ந்தான்.

## II. ஐசுவரியவான் சுயநலமாக வாழ்ந்தான்

ஐசுவரியவான் தனக்குக் கிடைத்த செல்வங்களை பகிர்ந்து கொள்ளாமல் அவன் இரத்தாம்பரமும், விலையேறப்பெற்ற வஸ்திரமும் தரித்து அனுதினமும் சம்பிரமமாய் வாழ்ந்து கொண்டிருந்தான். ( லூக் 16:19 ) தனக்கிருக்கும் ஐசுவரியத்தால் இப்படிப்பட்டவர்கள் சுகபோகமாய் வாழுகின்றனர். (யாக் 5:5) இப்படி சுகபோகமாக வாழ்ந்தால் உயிரோடே செத்தவர்களுக்கு ஒப்பாகும் (1 தீமோ 5:6) ஐசுவரியவான் சுகபோகமாக, சுயநலமாக வாழ்ந்தான். இன்றும் அநேக பணக்காரர்கள் தனக்கிருக்கும் பணத்தை சுவிசேஷத்திற்கு சபைக்கு பக்திக்குரிய கூட்டங்களுக்கு பயன்படுத்தாமல் சுயநலவாதியாக வாழ்கின்றனர். பணப்பிரியன் பணத்தினால் திருப்தியடைவதில்லை, செல்வப்பிரியன் செல்வப் பெருக்கினால் திருப்தியடைவதில்லை என்று வேதம் கூறுகின்றது (பிர 5:10). மேலும் பணி ஆசை எல்லாத்தீமைக்கும் வேராயிருக்கிறது என்று கூறுகின்றது. இப்படிப்பட்ட ஐசுவரியவர்கள் முட்டாள்களாக உள்ளனர் (லூக் 12:20). முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் தங்களிடம் இருக்கும் காணியாட்சிகளை விற்று பகிர்ந்து கொடுத்தார்கள். ( அப் 2:45 ) வாரியிறைத்தான் ஏழைகளுக்குக் கொடுத்தான் (2 கொரி 9:9) என்று வேதம் கூறுகின்றது. இந்த ஐசுவரியவான் வாரியிறைக்கவும் இல்லை. ஏழையான லாசருக்கு எதுவும் கொடுக்கவும் இல்லை சுயநலமாக, அகபோகமாக வாழ்ந்தான்.

## III. வேத வசனங்கள் பயனற்றவை என நினைத்தான்!

ஐசுவரியவான் ஆபிரகாமிடத்தில் தகப்பனே எனக்கு ஐந்து சகோதரர்கள் உண்டு அவர்கள் நான் இருக்கும் பாதாளத்திற்கு வராதபடி லாசருவை அவர்களிடத்திற்கு அனுப்பும் படி வேண்டிக் கொள்கிறேன் என்றான் (லூக் 16:27 ). அதற்கு பரதீசுவிலிருக்கும் ஆபிரகாம் அவர்களுக்கு மோசேயும், தீர்க்கதரிசிகளும் உண்டு அவர்களுக்கு அவர்கள் செவிகொடுக்கட்டும் என்று பதிலளித்தார். அதற்கு ஐசுவரியவான் அப்படியல்ல தகப்பனாகிய ஆபிரகாமே, மரித்தோரிலிருந்து ஒருவன் அவர்களிடத்திற்குப்போனால் மனந்திரும்புவார்கள் என்றான். அதாவது, தீர்க்கதரிசன வசனங்களும், வேத கற்பனைகளும் போதுமானவைகள் அல்ல அவற்றை விசுவாசிக்க ஒரு பெரிய அற்புதத்தைக் காண வேண்டும் என்று நினைத்து சொன்னான். இன்றும் அநேகர் வேத வசனங்கள் போதுமானவைகள் அல்ல கிறிஸ்துவின் சபையார் எதற்கெடுத்தாலும் வசனத்தை சொல்லுகிறார்கள் என்று கூறுகின்றன. வேத வசனங்கள் விசுவாசிக்க அற்புதங்கள் வேண்டும் என்று சொல்லுகின்றன. அப்படிப்பட்டவர்களுக்கெல்லாம் ஒரே பதில் எழுதப்பட்டதற்கு மிஞ்சி என்ன

வேண்டும் என்பதே! ( 1 கொரி 4:6 ) இந்த ஐசுவரியவானும் அவனது சகோதரர்களும் நினைத்தார். வேத வசனங்கள் விசுவாசித்து அதன்படி செய்யாதவன் நித்தியமான அழிவைக் காண்பார்கள் ( மாற்கு 16:16 ) அற்புதங்கள், அடையாளங்கள், சாட்சி சொல்லுவது மூலமாக இரட்சிப்பு அடைய வேண்டும் என்பது தேவனுடைய திட்டமல்ல வேதவசனத்தால் ஒருவனை இழுத்தும் கொள்ளுகிறார். (யோ 6:44,45) வசனத்தை விசுவாசித்து ஏற்றுக்கொள்வோமேயனால் அது நம்மை இரட்சிக்க வல்லது ( யாக் 1:21 ) வேத வசனத்தை அவமதித்தால் நாசமடைவோம். ( நீதி 13:13 ) ஐசுவரியவானுக்கு, ஆபிரகாம் கூறுவது அவர்கள் மோசேக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் செவி கொடாவிட்டால் மரித்தோரிலிருந்து ஒருவன் எழுந்து போனாலும் நம்பமாட்டார்கள் என்று சொன்னான் ( லூக் 16:31 ) எனவே அற்புதங்கள் அடையாளங்கள் எல்லாம் மாயை! எனவே வேத வசனங்கள் மட்டும் விசுவாசிப்போம்.

●

---

# நாளும் நடப்பும்

1. தொலைபேசி எண்ணை மாற்றாமலேயே, நாடு முழுவதும் விரும்பிய தொலைத்தொடர்பு சேவைகளை மாற்றிக்கொள்ளும் வசதி அமுலுக்கு வந்தது.

2. பேருந்து நிலையங்களில் குழந்தைகளுக்கு பாலுட்ட தனி அறைகள் – தமிழக அரசு.


3. கடந்த சில வாரங்களாக தமிழகத்தை வெயில் வாட்டி வதைக்கிறது அதன் காரணமாக மின் பயன்பாடு கிடுகிடு உயர்வு.


4. நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஊதியத்தை 100 சதவீதம் உயர்த்த நாடாளுமன்றக்குழு பரிந்துரை.


5. செவ்வாய் கிரகத்தில் பறப்பதற்கான விமானத்தை அமெரிக்காவின் நாசா விஞ்ஞானிகள் உருவாக்கி வருகின்றனர்.

6. கோபா அமெரிக்கா கால்பந்து போட்டியில் முதல் முறையாக சிலி அணி சாம்பியன்.


12 வித்தியாசமான தலைப்புகளில் கைப்பிரதிகள் கிடைக்கும்.
தேவைக்கு எங்களைத் தொடர்பு கொள்ளவும்.















# World Evangelism Gospel Media

Rajanayagam & Benny Martin in Tamil On Tamilan TV
**Monday 7:00 - 7:15 am**
**Thursday 9:30 - 10:00 pm**
**Saturday 7:15 - 7:30 am**




Arjunan In Tamil
**TV : Every Monday 6:00 - 6:15 am and**
**Every Saturday 6:15 - 6:30pm on Tamilan TV**
**Radio : Every Saturday 5:30- 5:45 pm on Sri Lanka Radio**

Hindi TV Program : Sunny, Francis & Vinay David Speaking
**Sunday & Tuesday ( 7:00 - 7:30 ) pm on**
Shubhasandesh Hindi Channel

P.K. Varghese In Malayalam:
**Every Saturday 6:00 - 6:30 am on Jai Hind Channel TV**

Philemon & Kingsley in Tamil:
**Tamilan Tv : Sunday 6:45 - 7:00 pm**
**Friday 6:00 - 6:30 am**



P.R. Swamy & Douglas:
**Every Sunday to Wednesday At 5:30 - 5:45 pm**
**on 25 And 49 Meter bend of Sri Lankan Radio**


Joshua & Ricky Gootam In Telugu:
**Every Saturday at 6:00 pm Subhavartha Channel**
**Every Wednesday at 6:30 pm on Rakshana Channel**
**Every Thursday at 11:00 am on Rakshana Channel**
**Satyavani T.V. online : www.sakthitv.in**
**Every Wednesday & Friday at 8.00 pm**


Thang Lien in Manipur:
**Hornbill Cable, Channel No.1**
**6:00 - 7:00 pm, Sunday, Tuesday, Thursday, Saturday.**

For English Voice of Truth
Contact - Brothers Philemon or Kingsley
**@ Po box 15 , 45/c1 Church Lane, Coronation Street,**
**Arasaradi, Madurai - 625016**
**9244204420 / 21, 0452 - 2607026**


Regd. News Paper RNI No. TNTAM/2006/20446
Postal regn. No. Erode/26/2015-2017
Posted at Erode HPO on 20/21 of Every Month.
**Licensed to Post without pre payment**
**No: TN / WR / ERD / 03 / WPP / 2015-2017**


## எங்களது இதர வெளியீடுகள்














சர்வதேச தரத்தில், தலை சிறந்த
பிரசங்கிகளால் எழுதப்பட்ட
**சத்தியத்தின் குரல்**
என்ற நூல் வேண்டுவோர்
எங்களைத் தொடர்பு கொள்ளவும்.
- ஆசிரியர்

# திருமறை தியானம்

## தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **தமிழன்** | **TV** | திங்கள் | காலை | 7:00 | மணி |
| **தமிழன்** | **TV** | வியாழன் | இரவு | 9:30 | மணி |
| **தமிழன்** | **TV** | சனி | காலை | 7:15 | மணி |

## வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

- Advanced Bible Correspondence Course -

**பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புபவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.**

ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

**விருப்பமுள்ளவர்கள்**
**மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.**

இயக்குனர்

## அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

த.பெ.எண் 27, காங்கேயம் 638-701.
தமிழ்நாடு, இந்தியா.

Printed by : K.C. Senthilkumar at Sun